விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 24 செவ்வாய்க்கிழமை (09.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# சரத் பொன்சேகாவின் கருத்தால் தமிழகம் எங்கும் கொந்தளிப்பு

## உருவப் பொம்மைகள் எரிப்பு கலகமடக்கும் பொலிஸார் குவிப்பு

(சென்னை)

தமிழகத் தலைவர்கள் 'அரசியல் கோமாளிகள்' என இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா கூறிய கருத்தால் தமிழகம் எங்கும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரணாப் முகர்ஜியை இங்கு வருமாறு நானே அழைப்பு விடுத்தேன்

### வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம

(கொழும்பு)

இந்தியாவின் தூதுவராக இலங்கை வரும் அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு வருமாறு ஒரு மாத காலத்திற்கு முன்னரே நான் அழைப்பு விடுத்தேன்.

அவர் அந்த அழைப்பினை ஏற்றுத்தான் இலங்கை வருகிறார். இவ்வாறு தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம.

வெளிவிவகார அமைச்சின் புதிய காரியாலம் ஒன்று கொழும்பு 03 இல் நேற்று திறந்து வைக்கப்பட்டது. வைபவத்தில் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம, அங்கு வந்திருந்த ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்துப் (12ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)


காங்கேசன்துறை-திருகோணமலைக்கிடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என இராணுவ யாழ். சிவில் நிர்வாக அலுவலகர் மேஜர் பெரேரா தெரிவித்தார்.

நேற்று மாலை திருகோணமலையில் இருந்து பயணிகள் கப்பல் காங்கேசன் துறைக்கு புறப்படுவதாக தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் பிரகாரம் இன்று காங்கேசன் துறையிலிருந்து பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும் எனவும் மேஜர் பெரேரா தெரிவித்தார். (ந-5)

## இராணுவத் தளபதியின் விமர்சனம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது

### தமிழக முதல்வர் கருணாநிதி



(சென்னை)

தமிழக தலைவர்களை இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விமர்சித்திருப்பது எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என்று தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு கலைஞர் மு.கருணாநிதி அளித்த பதில் வருமாறு,

***கேள்வி:*** இலங்கை இராணுவத் தளபதி தமிழ் நாட்டின் தலைவர்கள் கோமாளிகள் என்று அருவருக்கத்தக்க வகையில் விமர்சனம் செய்திருக்கிறாரே?

***பதில்:*** அந்தத் தளபதி (12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கிளைமோர் தாய்,மகன் உட்பட மூவர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளியவளையில் படையினரின் ஆழ ஊடுருவும் அணி நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் தாயும் ஒன்பது வயதான மகனும் உட்பட மூவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

முள்ளியவளை தெற்கு களிக்காடுப் பகுதியில் நெடுங்கேணி நோக்கிய வீதியில் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் இக் கிளைமோர் தாக்குதல் இடம்பெற்றது.

முள்ளிவளை மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த உதயகுமார் பகீரதி (வயது 28) இவரது மகன் உதயகுமார் திலக்சன் (வயது 9) மற்றும் புலேந்திரராசா அஜந்தகரன் (வயது 22) ஆகியோரே பலியானவர்களாவர்.

படையினரின் தாக்குதலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் கண்டனம் தெரிவித்துள்ளார். (ந-5)

## வரவு-செலவுத் திட்டம் வாக்களிப்பில் வெற்றி

(கொழும்பு)

2009ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 42 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றது.

வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவாக 126 வாக்குகளும் எதிராக 84 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் ஜாதிக ஹெல உறுமய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக் குழு ஆகிய கட்சிகள் வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (12ஆம் பக்கம் பார்க்க)

## உணவில் ஊறு வந்தால் உடல் நலத்தில் கேடு வரும்.

- நன்கு வேகவைத்த உணவுகளையே உட்கொள்ளுங்கள்.
- பச்சையாகவுண்ணும் உணவு வகைகளை இக்காலத்தில் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- பழங்களையும் காய்கறிகளையும் நன்கு உப்பு நீரில் கழுவியபின் உட்கொள்ளுங்கள்.
- சமைத்த உணவுகளை உடனேயே உட்கொள்ளுங்கள் அல்லது ஈக்கள் மொய்க்காதவாறு மூடி வையுங்கள்.
- பகலில் சமைத்த உணவுகளை இரவில் உண்ணும் போது நன்கு சூடாக்கியபின் உட்கொள்ளுங்கள்.
- உணவைத் தொடுவதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் முன்னதாகவும் உங்களது கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவியுள்ளதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.
- உணவோடு தொடர்புடும் பாத்திரங்கள், அகப்பைகள், கரண்டிகள் எப்போதும் சுத்தமாகவுள்ளதை உறுதிப்படுத்துங்கள்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.


அனுசரணை
care CARE International

(C-1814)

# ஜனாதிபதி மகிந்தவும் இராணுவத் தளபதியும்
# தமிழகத் தலைவர்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும்

## இலங்கைத் தூதுவரை வெளியேற்றவும் நடவடிக்கை தேவை

# வை.கோபாலசாமி சீற்றம்



**(சென்னை)**

**இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரின் தரைப் படைத் தளபதியுமான சரத் பொன்சேகாவும் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் இந்தியாவிலிருந்து இலங்கை தூதுவரை வெளியேற்ற வேண்டும் என்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக வைகோ நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கைத் தீவில் தமிழ்க் குலத்தையே பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டு இராணுவத் தாக்குதலை நடத்தித் தமிழர்களைக் கொன்று குவித்து இனப்படுகொலை செய்து வருவதை சிங்கள அரசு நிறுத்த வேண்டும். போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி உள்ள நிலையில் தமிழக அரசியல் கோமாளிகள் சொல்வதை இந்திய அரசு கேட்காது என்று சிறிலங்கா இராணுவத்தின் தலைமைத்தளபதி சரத் பொன்சேகா கொக்கரித்து உள்ளார்.

இந்திய அரசு போர் நிறுத்தம் செய்யு மாறு கேட்கவில்லை என்றும் இனியும் கேட்காது என்றும் இது குறித்து இந்தியப் பிரதமர் தம் கருத்தை எங்களிடம் தெரிவித்து உள்ளார் என்றும் கூறி உள்ளார்.

தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட போர் நிறுத்தத் தீர்மானத்தின் மை உலர்வதற்கு உள்ளாக, புதுடில்லியில் இந்தியப் பிரதமரைச் சந்தித்துவிட்டு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கும் வரை போர் நிற்காது என்று மமதையோடும் அடங்காத் திமிரோடும் மூர்க்கத்தனமாக பேசியது இந்திய அரசுக்கும், இந்தியமக்களுக்கும் இழைக்கப்பட்ட அவமானமாகும்.

இந்த வெட்கக்கேடான இழிசெயலுக்கு இந்திய அரசு கண்டனம் தெரிவிக்காததால் தான் ராஜபக்ஷவின் ஏவுதலோடு சிங்களத் தளபதி தமிழகத் தலைவர்களைக் கொச்சைப் படுத்தி அவமானப்படுத்திப் பேசும் துணிச்சலைத் தந்து உள்ளது.

சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைத் தமிழக முதல்வர் கூட்டியபோதும் டெல்லிக்குச் சென்று கட்சித் தலைவர்களுடன் பிரதமரைச் சந்தித்தபோதும் இவையெல் லாம் கண்துடைப்பு நாடகம் என்றும் இந்திய அரசு போர் நிறுத்தத்தை வற்புறுத்தப் போவது இல்லை என்றும் தெரிவித்தேன்.

தற்போது சிங்களத் தளபதி தமிழகத்தில் போர் நிறுத்தம் கேட்ட அனைத்து அரசியல் தலைவர்களையும் இழிவுபடுத்தி உள்ள அக்கிரமம் மன்னிக்க முடியாத கொடுமை ஆகும்.

இலங்கையில் தமிழ் இன அழிப்புப் போரைச் சிங்கள அரசு நடத்துவதற்கு ஆயுதங்கள், நிதிஉதவி,வழங்கி இராணுவரீதியான தகவல் பரிமாற்ற ஒப்பந்தங்களைச் செய்து இந்தப் போரைப் பின்னால் இருந்து இந்திய அரசு இயக்கி தமிழ் இனத்துக்குத் துரோகம் இழைப்பதால் ஏற்பட்ட அகம்பாவமும் துணிச்சலும்தான் சரத் பொன்சேகாவை இப்படிப் பேச வைத்து உள்ளது.

இந்தியா உலகின் அணு ஆயுத வல்லரசுகளுள் ஒன்று. ஆனால் சுண்டைக்காய் நாடான இலங்கையில் சிங்கள இனவாத அரசு, ஏழு கோடி தமிழ் மக்கள் உள்ள தமிழகத்தை அதன் சட்டமன்றத் தீர்மானத்தைக் கிள்ளுக்கீரையாக நினைத்து மண்டைக் கொழுப்புடன் எக்காளமிடும் அவமானத்தை இந்திய அரசுதான் ஏற்படுத்தி உள்ளது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சரை டில்லிக்கு வரவழைத்து போர்நிறுத்தம் செய்கிறாயா? இல்லையா? என்று எச்சரிக்கை செய்வதற்குப் பதிலாக இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சரை இலங் கைக்கு தூது அனுப்பப் போகிறோம் என்று சொல்வதே மானக்கேடு ஆகும்.

இனியும் பொறுப்பதற்கு இல்லை என்று தமிழ் மக்கள் எரிமலையாகச் சீறவேண்டிய தருணம் ஏற்பட்டு விட்டது. இலங்கையில் தமிழ் மக்களைப் படுகொலை செய்து கொண்டே இந்தியக் கடலிலும் நுழைந்து தமிழக மீனவர்களையும் தாக்கி கொலை பாதகம் செய்து கொண்டே இத்தனைக்கும் மேலாக தமிழகத் தலைவர்களைத் துச்சமாகக் கருதி கேலி புரியவும் ஏளனம் செய்யவும் சிங்களத்தளபதி முற்பட்டு விட்டார்.

இது தமிழ் இனத்துக்கும் தாய்த் தமிழகத்து தமிழர்களுக்கும் இந்திய மக்களுக்கும் இழைக்கப்பட்ட பெருத்த அவமானம் ஆகும். இந்தியப் பிரதமர் உடனடியாக இலங்கை அரசுக்குப் பலத்த கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் நிபந்தனை அற்ற மன்னிப்புக் கோருமாறு இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும் அப்படி மன்னிப்புக் கேட்காவிடில் இலங்கை தூதுவரை இந்தியாவில் இருந்து மத்திய அரசு வெளியேற்ற வேண்டும்.

இலங்கை ஜனாதிபதியும் தளபதியும் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் இலங்கை தூதுவரை இந்தியாவில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்றும் கோரி டிசம்பர் 10ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் முன்பு எனது தலைமையில் கறுப்புக்கொடி கண்டன ஆர்பாட்டம் நடைபெறும்.

தமிழர்களின் மானம் காக்க நடத்தப்படும் இந்த அறப்போரில் தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார் அவர். (ந-5)

# வன்னியில் இருந்து வந்தவர்கள் கோப்பாயில் தங்க வைப்பு

வன்னியிலிருந்து வந்து குருநகர் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வன்னியிலிருந்து வெளியேறிய 49 குடும்பங்களைச்சேர்ந்த 132 பேர் குருநகரில் அமைந்திருந்த முன்னைய மாவட்ட மேல் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் கடந்த சனிக்கிழமை முதல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டனர். இடம் பெயர்ந்தவர்கள் தங்கவைக்கப்பட்டிருப்பதை முன்னிட்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

தங்கவைக்கப்பட்டிருப்பவர்கள் முகாமை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களை அரசாங்க அதிபர் திணைக்கள அதிகாரிகள் மாத்திரமே சென்று பார்வையிட்டு வருவதுடன் மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையில் அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுகிறது.

அத்துடன் முகாம்களில் தங்கவைக்கப் பட்டிருப்பவர்களின் சுகாதார தேவைகளை பிராந்திய சுகாதார அதிகாரிகள் நிறைவேற்றி வருகின்றனர்.

முகாம்களில் தங்கியிருப்பவர்களில் நேற்று ஆரம்பமான க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களும் உள்ளடங்குகின்றனர். இந்தமாணவர்கள் நேற்று பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

அத்துடன் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வரும் மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (ந-5)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



வீரகத்தி விநாயகர் மேல் மிகவும் பக்தி கொண்டவரான திருமதி பரஞ்சோதியின் கணவரும் செல்வன் துஷ்யந்தனின் தந்தையுமான

**சின்னப்பு ஜெயராசா**

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அமரரின் ஆத்மா சாந்தி பெற விநாயகரை வேண்டுகிறோம்.

சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள்
(ஆதீன கர்த்தா)
பிரதமகுரு, கலட்டி அருள்மிகு
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்.

(1942)


# சர்வதேச எயிட்ஸ் தினம் கட்டுரைப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு மாவட்ட மட்டத் தில் நடாத்தப்பட்ட திறந்த கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மண்ட பத்தில் நடைபெறும் இவ் விழாவில் வெற்றிபெற்றவர்கள் தமது பணப்பரிசினையும் சான்றிதழினையும் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

மேற்படி திறந்த கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்று பரிசில்களைப் பெறுபவர்களின் விபரம் வருமாறு,

முதலாம் இடம் (10 ஆயிரம் ரூபாய் பணப் பரிசு) பரராஜசிங்கம் ராஜேஸ்வரன் (பலாலி வீதி,திருநெல்வேலி); இரண்டாமிடம் (7ஆயிரத்து 500 ரூபாய் பணப்பரிசு)செல்வி சிவசித்திரா பழனி (அரசடிவீதி,யாழ்ப்பாணம்) மூன்றாமிடம் (5ஆயிரம் ரூபாய் பணப்பரிசு) மாணிக்கவாசகன் நிமலன் (கோட்டக் கல்வி அலுவலகம்,நல்லூர்).

ஆறுதல் பரிசு பெறுவோர்(2 ஆயிரம் ரூபாய் பணப்பரிசு)செல்வி தேவமதி ஜோசப் (மாகியப்பட்டி),ப.வானதி (நவாலி தெற்கு), ஆர்.மயூரன் (பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்), சு.சுஜித் (புகையிரத நிலைய வீதி,கோண்டாவில்),ம.மு.செலினி நில்மினி (நெல்லியடி,கரவெட்டி). (ந-5)


GRADE: 8,9 -ENGLISH MEDIUM
GROUP CLASS
முற்றிலும் புதிய முறையில் அனுபவம் மிக்க ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்!
திங்கள் முதல் வெள்ளி வரை காலை:6 – 7மணி
SUPER GRADE TEACHER
(MATHS:MR.BALAMURALI) (SCIENCE:MR.SIVATHASAN)
(GEOGRAPHY:MR.KANTHASAMY)
(HEALTH&PT, HISTORY, CITIZENSHIP:MR.VAASAVAN)
கவலையை விடுங்கள் உயர்புள்ளி உங்களுக்கே!
15.12.2008 காலை:6.00மணிக்கு ஆரம்பம்
சயன்ஸ்அக்கடமி
(நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக)
தரம்:4முதல் 11வரை அமைதியான சூழலில் வகுப்புகள் சிறப்பாக ஆரம்பமாகிவிட்டன


# வெள்ளப் பாதிப்பு விபரம் கைத்தொழில்அ.ச.சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட சிறு கைத்தொழில் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களின் விபரம் சேகரிக்கப்படுவதாக யாழ்.கைத்தொழில் அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட சிறு கைத்தொழில் மற்றும் சுய தொழில் முயற்சியாளர்கள் தமது இழப்புக்கள் குறித்த விபரங்களை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு யாழ் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவிப் பணிப்பாளர் ஆர்.ஜெயமனோன் கேட்டுள்ளார். (ந-5)

## இன்று ஒரு தகவல்

# மனமும் நிறைவும்

ஒரு கருமி இருந்தான். அவன் தான் சேர்த்துவைத்த பணத்தையெல்லாம் ஒரு மரத்துக்கடியில் புதைத்து வைத்திருந்தான்.

வாரம் ஒரு தடவை அந்த மரத்தடிக்கு வந்து புதைத்த இடத்தை ஆவலோடு பார்த்துக்கொண்டிருப்பான். சிறிது நேரம் கழித்து போய்விடுவான்.

ஒருநாள் ஒரு திருடன் வந்து இவன் புதைத்து வைத்த பணத்தையெல்லாம் எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

கருமி புலம்ப ஆரம்பித்தான். இவனது புலம்பலைக் கேட்ட அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஓடிவந்து விசாரித்தார்கள்.

ஒரு பெரியவர் "ஏனப்பா.... வாராவாரம் வந்து இந்த இடத்தைப் பார்ப்பதாகச் சொன்னாயே.. எப்பொழுதாவது இதில் இருக்கும் பணத்தை எடுத்து செலவு பண்ணியிருக்கிறாயா?" என்று கேட்டார்.

"நான் அடிக்கடி வந்து பார்ப்பதுதான் வழக்கம் அதைத்தொட்டதே இல்லை!" என்றான்.

"அப்படியானால் இப்பொழுதும் நீ அதேபோலவே வாராவாரம் வந்து பார்த்து விட்டுப்போகலாமே!" என்றாராம் அந்தப் பெரியவர் அதுவும் சரிதானே!

எவ்வளவு காலமானாலும் அவன் அந்த பணத்தை எடுத்து செலவு பண்ணப் போவதில்லை. அப்படியிருக்கும் போது உள்ளே பணம் இருந்தாலும் ஒன்றுதான் இல்லாமல் போனாலும் ஒன்றுதான்.

இதிலிருந்து விளங்குவது என்னவென்றால் ஒருவரிடம் இருக்கும் பணத்தைக்கொண்டு அவர் பணக்காரரா ஏழையா என்று முடிவு செய்வது சரியில்லை. அந்த செல்வத்தை அனுபவிக்கும் திறன்... பயன்படுத்தும் திறன் என்பவற்றை வைத்துத்தான் அவர் ஏழையா பணக்காரரா என்பதை நிர்ணயம் செயயவேண்டும் அதுதான் சரி.

செலவு செய்யத் தெரியாதவன் சேகரம் பண்ணிக் கொண்டு இருப்பதில் என்ன பிரயோசனம்?

தலைமுடியே இல்லாதவன் தாராளமாக சீப்புகளை வாங்கி சேகரிப்பதுபோல் சிலசமயம் செலவு செய்ய நாம் தயாராக இருந்தாலும் அந்தச் செல்வம் நமக்குப் பயன்படுவதில்லை.

அரேபிய வியாபாரி ஒருவர் விலையுயர்ந்த முத்துக்களை வைத்து வியாபாரம் செய்தார்.

ஒருசமயம் அவர் பாலை வனம் வழியாக ஒட்டகத்தில் போய்க்கொண்டிருந்தபோது கடுமையான புயல் வீச ஆரம்பித்தது. திசைமாறி இவர் எங்கேயோ வந்துவிட்டார். கூட வந்தவர்களையும் காணவில்லை.

இவர் பயந்துகொண்டே அங்கும் இங்கும் அலைந்து திரிந்தார். வழிதெரியவில்லை பசியும் அதிகமாகிவிட்டது.

ஒட்டகத்தின் முதுகில் ஒரு மூட்டை இருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தார். உள்ளே ஏதாவது இருக்கிறதா என்று தேடிப் பார்த்தார்.

அதுவரைக்கும் கண்ணில் தட்டுப்படாத அபூர்வமான ஒரு பை கண்ணில் பட்டது. அதில் ஏதாவது சாப்பிடுவதற்கு இருக்கும் என்று நினைத்து ஆவலாக அதை பிரித்துப் பார்த்தார்.

அந்தப் பையில் விலையுயர்ந்த முத்துக்கள் நிறைய இருந்ததாம்.

அப்பொழுதுதான் அவர் நினைத்தாராம். விலையுயர்ந்த முத்துக்கள் கூட சாப்பிடுவதற்கு உணவாக முடியாது என்று

இந்த நேரத்தில் ஏது நமக்குத் தேவையோ அது நமக்குத் தாராளமாக கிடைக்கவேண்டும். அது கிடைப்பதற்கு நம்மிடம் உள்ள செல்வம் பயன்படவேண்டும்.

அது நமக்கும் பயன்படலாம். நம் மூலமாக அடுத்தவர்களுக்கும் பயன்படலாம்.

அதுதான் செல்வத்தின் பயன்.

ஒரு மரத்தடியில் உட்கார்ந்து ஒருவன் அழுது கொண்டிருந்தான்.

அந்தப் பக்கமாக வந்த இன்னொருவன் "ஏன் அழுதுகொண்டிருக்கிறாய்?" என்றான்.

"இந்த இடத்தில்தான் பூமிக்கு அடியில் பணம் இருக்கிறது. புதைத்த இடம் தெரியவில்லை. அதுதான் அழுகிறேன்" என்றான்.

"நல்லா ஞாபகப்படுத்திப்பார் எந்த இடத்தில் புதைத்தாய்?" என்று கேட்டான் அவன்.

"அது எப்படி எனக்குத் தெரியும் புதைத்து வைத்திருக்கிறவன் நான் இல்லையே! எங்கள் எதிர்வீட் டுக்காரர்! "என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பிரணாப் முகர்ஜியின் வருகையையும் இந்திய தலையீடுகளையும் அரசாங்கம் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்

## ஜே.வி.பி தெரிவிப்பு

முதுகெலும்புள்ள அரசாங்கம் என்பதை நிரூபிக்க வேண்மானால் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் வருகையையும் இந்திய தலையீடுகளையும் கூட்டமைப்பு அர சாங்கம் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஜே.வி. பி. யின் பிரசாரச் செயலாளரும் கம்பஹா மாவட்ட எம்.பி.யுமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஷில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் இரகசியம் அம்பலத்துக்கு வந்து விட்டது. நாட்டை இந்தியாவுக்கு அடகு வைத்துள்ள அரசாங்கம் படையினரைக் காட்டிக் கொடுக்கும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு செல்வது உறுதியாகி விட்டது என்றும் அவர் சொன்னார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் இலங்கை விஜயம் குறித்து கேட்ட போதே விஜித்த ஹேரத் எம். பி.மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் , தேசிய பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் தலையீடுகள்பொருத்தமற்றவை. எமது உள் நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதற்கு மஹிந்த ராஜ பக்ஷ அரசாங்கமே காரணம். குறிப்பாக எமது நாட்டை இன்றைய அரசாங்கம் இந்தியாவுக்கு அடகு வைத்து விட்டது என்றே கூற வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டிய விடயம் துரிதப்படுத்தப்பட வேண்டும். அதற்காக முதலில் பயங்கரவாதத்தை இல்லாது செய்ய வேண்டும். அந்தப் பணியில் எமது படையினர் பாரிய வெற்றிகளைப் பெற்று வருகின்றனர். உயிர்த்தியாகங்களைச் செய்து நாட்டைக் காக்க போராடி வருகின்றனர்.

ஆனால், படையினரின் அர்ப்பணிப்புகளைச் காட்டிக் கொடுக்கும் ஒரு செயற்திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஷில் ராஜபக்ஷவின் இந்திய விஜயம் குறித்த இரகசியத்தை அம்பலப்படுத்துமாறு ஜே.வி.பி வலியுறுத்தி வந்தது. அந்த இரகசியம் இன்று அம்பலத்துக்கு வந்து விட்டது.

உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட அந்நிய சக்திகளுக்கு அதிகாரங்களைக் கொடுத்ததே கூட்டமைப்பு அரசாங்கம் தான். அதன் பயனாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை வர இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியாவின் ஒரே நோக்கம் இலங்கையில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது தான். அதனை ஏற்றுக் கொண்டு இந் திய தாளத்துக்கு ஆடுகின்றதான இலங்கை அரசாங்கம் யுத்தம் நிறுத்தம் ஒன்றுக்கு செல்வது உறுதியாகவிருக்கின்றது. இது படையினரைக் காட்டிக் கொடுக்கும் செயலாகும்.

அமைச்சரும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெலவின் கருத்துக்களும் யுத்த நிறுத்தமொன்றுக்கு செல்வதாகவே இருக்கின்றது.

இதுவரையில் போரை முன்னெடுத்து விட்டு இறுதித்தருணத்தில் ஆயுதங்களை கீழே வைத்து விட்டு பேச்சுக்கு வருமாறு புலிகளை அழைப்பது கேலிக்குரிய விடயமாகும். இந்த அரசாங்கத்திடம் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற அக்கறையோ அல்லது அதற்கான கொள்கையோ இருப்பதாகத் தெரியவில்லை.

முதுகெலும்புள்ள அரசாங்கம் என்பதைக் காட்ட வேண்டுமானால் பிரணாப் முகர்ஜியின் வருகையையும் அதனுடன் சேர்ந்த இந்திய தலையீடுகளை தடுத்து நிறுத்த வேண்டும். (ஓ-6)

## இராசி பலன்

*09.12.2008*
*(கார்த்திகை 24, செவ்வாய்க்கிழமை)*
*அச்சுவினி முன்னிரவு 9.32 மணிவரை*
*ஏகாதசி காலை 7.29 மணிவரை*
*துவாதசி பின்னிரவு 5.50மணிவரை*
*இராகுகாலம் 3.19 4.49 மணிவரை*
*சுபநேரம் 10.49-12.19 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | காரிய அலைச்சல், பிரயாணம், சுபசெலவு, உறவினர் மனஸ்தாபம் |
| மிதுனம் | எடுத்தகாரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், மனஸ் தாபம். |
| கடகம் | அதிகாரம், நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு, உற்சாகம். |
| சிங்கம் | புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு, முயற்சிதாமதம். |
| கன்னி | அபகீர்த்தி, ஆரோக்கியக் குறைவு. காரிய தாமதம், பணக்குறைவு. |
| துலாம் | களஸ்திர நன்மை, காரிய சித்தி, நண்பர்கள் உதவி விருந்துபசாரம். |
| விருச்சிகம் | தேகநலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், சுபநிகழ்வு, பகைவர் நேசம். |
| தனுசு | வியாபார நன்மை, அதிகசெலவு முயற்சி தாமதம், பூர்வ புண்ணிய கருமம். |
| மகரம் | மாதா சுகம், சுபசெலவு, காரிய தாமதம், உறவினர் வருகை. |
| கும்பம் | கூட்டு முயற்சி, அந்தியர் சந்திப்பு பிரயாண நன்மை, பொருள் சேர்க்கை. |
| மீனம் | உணர்ச்சி வசபபடல், பண விரயம், காரிய தாமதம், போசன சுகம். |

வளவன்

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(நல்லூர்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பொது நூலகத்தால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் இப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி வார நிறைவு விழாவில் வழங்கப்படுமென நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம். சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்று பரிசில்களை பெறுவோர் விபரம் வருமாறு:

**கட்டுரை-கீழ்ப்பிரிவு**

த.சரண்யா-முத்துத்தம்பி ம.வி, த. டினேஷா-முத்துத்தம்பி ம.வி, உ. அசோகன் -செங்குந்த இ.க,

**மத்திய பிரிவு**

ச. பிரசங்கா -செங்குந்த இ.க, மு.சிவசக்தி -வேம்படி ம.க, பா.ராகவேந்தன் -செங்குந்த இ.க,

**மேற்பிரிவு**

ரா. ரஜீவனா-முத்துத்தம்பி ம.வி, பா. சிவகௌரி -செங்குந்த இ.க, செ.சகிக்கா-முத்துதம்பி ம.வி,

**கவிதை -கீழ்ப்பிரிவு**

சி.சிந்துஜா -முத்துத்தம்பி ம.வி, ரா.அறிவழகி-முத்துதம்பி ம.வி, மு.சியானி-செங்குந்த இ.க,

**மத்திய பிரிவு**

வி. தாட்சாயினி -செங்குந்த இ.க, ர.சாளினி-முத்துதம்பி ம.வி, இ.அருள்ஜோதி -முத்துதம்பி ம.வி,

**மேற்பிரிவு**

ரா.றஜீவனா -முத்துத்தம்பி ம.வி, தி. பிரியா-செங்குந்த இ.க, நா.சிந்துஜா -முத்துத்தம்பி ம.வி.

**ஓவியம் -கீழ்ப்பிரிவு**

செ.பகீரதன்-முத்துத்தம்பி ம.வி, பா.விசாகன்-செங்குந்த இ.க, கு. செவ்வியா-செங்குந்த இ.க,

**மத்தியபிரிவு**

சி.சந்துஜன்-முத்துத்தம்பி ம.வி, ம.கருண்ராஜ்-செங்குந்த இ.க, ப.பிரியங்கன்-செங்குந்த இ.க,

**மேற்பிரிவு**

செ. கஜீதரன்-முத்துத்தம்பி ம.வி, வி.கிசாந்தன் -முத்துத்தம்பி ம.வி, ம.பிரவீன்ராஜ்-முத்துத்தம்பி ம.வி,

**திருக்குறள் மனனப்போட்டி -தரம் 3**

த.நிதர்சனா-திருநெல்வேலி றோ.க.த.க.பா, ப.நவதாரகன்-திருநெல்வேலி றோ.க.த.க.பா, த. வேணுஜா-முத்துத்தம்பி ம.வி,

**தரம்4**-கி. சானுகா-திருநெல்வேலி றோ.க.த.க.பா, ஜெ.அருண்ராஜ்-திருநெல்வேலி இ.த.க.பா, பா. ஹரிதர்சன்-முத்துத் தம்பி ம.வி, பா.றம்மியா-திருநெல்வேலி றோ.க.த.க.பா,

**தரம் 5** க.விதுசிகா-திருநெல்வேலி றோ.க.த.க.பா, ம.கபிலன்-திருநெல்வேலி இ.த.க.பா, சி.ஜிந்து-திருநெல் வேலி-றோ.க.த.க.பா, கு.கிருஸ்ணராஜ்-திருநெல்வேலி றோ.க.த.க.பா. (ஓ-6)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவகலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' கார்த்திகை மாத இதழ் வெளிவந்துள்ளது. (ஓ-6)

## திருடர்களின் வாள்வெட்டில் தாயும் மகனும் படுகாயம்

மின்வெட்டு அமுலாகியிருந்த நேரத்தை சாதகமாகப் பயன்படுத்தி வீடொன்றினுள் வாள் சகிதம் நுழைந்த திருடர்கள், இருவரை வாளால் வெட்டி அவர்களது தங்க நகைகளையும் பெறுமதியான பொருட்களையும் களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு ஆனைக்கோட்டை பொன்னையா லேனில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் சிவபாதசுந்தரம் சுசீலா (வயது 57), அவரது மகன் சி.பிரகாஸ் (வயது 26) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். திருடர்கள் குறித்த பெண்ணின் தலையில் வாளால் தாக்கிவிட்டு அவரது நகைகளைப் பறித்து அவரது மகனையும் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர் அயலவர்களின் முயற்சியால் காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-6)

## சேத விபரங்களை புகைப்படம் எடுக்கும் உரிமையாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நிஷா வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வீடுகள் சேதமடைந்தவர்கள் பலர் தமது வீடுகளை புகைப் படங்கள் எடுத்து விட்டு தமது வீடுகளை மீண்டும் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னர் இடம்பெற்ற செல் தாக்குதல்களினால் சேதமுற்ற வீடுகளையே இதுவரையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் ப்பார்வையிடப்படாத நிலையில் இன்றைய வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை யார் பார்வையிடுவார் என்ற நோக்கில் தமது வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களை படம் எடுத்துவிட்டு வீடுகளைத் திருத்தி வருகின்றனர்.

இதேபோல சில விவசாயிகளும் தமது தோட்டங்களில் ஏற்பட்ட சேதங்களை புகைப் படம் எடுப்பதில் கவனம் செலுத்தியுள்ளனர். (ஓ-134)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் திருமதி செ. சகாதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக நிகொட் நிறுவன பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ். எஸ். ஆர் சிவரூபன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-2)

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடம் க.பொ.த(உ/த) பாடத் திட்டத்தில் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர வகுப்பு பாடத் திட்டத்தில் 'தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பமும்' நிரந்தரமான பாடமாக இணைக் கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் இருந்து க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இப்பாடம் கற்பிக்கப்படுவதோடு 2011 ஆம் ஆண்டு இப் பாடப் பரீட்சையை நடத்த கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

அத்துடன் 2009 இல் இப்பாடத்திற்கும் மாணவர்களுக்கான இலவச பாடநூல் தயாரிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு கல்வியமைச்சு தயாராகவுள்ளது.

இதுவரை காலமும் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மேலதிக பாடமாகவே தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பாடம் கற்பிக்கப்பட்டு வந்து தற்போது நிரந்தர பாடமாக உயர்தர வகுப்பு பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்பு மாணவர்கள் கட்டாய பாடமாக கற்றுக்கொள்ளும் மூன்று பாடங்களில் ஒரு பாடமாக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் பாடத்தை கற்று பரீட்சைக்கு தோற்றலாம்.

இதேவேளை, இப்பாடத்தை கற்பிப்பதற்கு தகைமையுள்ள ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சேவைக் கால பயிற்சி மற்றும் வழிப்படுத்தல்கள் கல்வி வலய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றவர்கள் மற்றும் மேற்படி பாடத்தை ஒரு பாடமாக படித்து பட்டம் பெற்றவர்கள், குறித்த பாடத் துறையில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் மற்றும் மேலதிக தகைமையாக கொண்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாடசாலை ரீதியாக இவர்கள் நியமிக்கப்பட விருப்பதோடு மேற்படி பாடம் கற்பிக்கப்படும் பாடசாலைகளுக்கு கணனி வசதிகள் வழங்கப்படவுள்ளன. (ஓ-6)

## பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நீர்வேலி கைதடி வீதியில் சொண்ட் (SOND) நிறுவனத்தினரால் 1300 பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன. (ஓ-134)

## குப்பை கூழங்களால் பொதுமக்கள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலாலிவீதி கந்தர்மடச் சந்திக்கு அண்மித்ததாக உள்ள அம்மன் வீதியின் இருமருங்கிலும் குப்பை கூழங்கள் அகற்றப் படாது காணப்படுவதால் அவ் வீதியால் பயணிப்பவர்கள் மற்றும் வீதியோரத்தில் வதிபவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரியவர்கள் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஓ-6)

## ஒளி விழா

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் கிறிஸ்தீவ மன்றம் நடத்தும் ஒளிவிழா நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை கேட்போர் கூடத்தில் திருமதி ப.அ. ஜோ.விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் செல்வி ஏ. ஆர். றோசறி ஜெயநாயகி கலந்துசிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபர் செ.சிவநடராசா கலந்து கொள்ள உள்ளார். (ஓ)




# தகவல் தொடர்பாடல் கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு (NCICT) யாழ்ப்பாணம், மானிப்பாய் ஆகிய பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த(உ/த) பரீட்சையில் 2பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி விண்ணப்பமுடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி ,பிறந்த திகதி,தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப் பட்ட விண்ணப்பப் படிவத்தை மாகாணக் கல்விப் பணிப்பாளர், (NAITA) , இல 7 , கோவில் வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (6)

## மகராஜியின் பிறந்த தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜீவசக்தி நிலைய ஏற்பாட்டில் மகராஜியின் ஐம்பத்தோராவது பிறந்த தின நிகழ்ச்சிகள் நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு அறிவிக்கப் படுகின்றது. (ஓ)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறும் ஆன்மீக சொற்பொழிவுகளில் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ' நால்வர் நற்றமிழ்' எனும் தலைப்பில் புராண வித்தகர் சிவ சண்முகவடிவேல் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-6)

## ஏகாதசி விரத பூசைகள்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஏகாதசி விரத பூசைகள் இடம்பெறவுள்ளன.

மாலை 3.30மணிக்கு சங்கல்பத்துடன் ஆரம்பமாகி அபிஷேக ஆராதனைகளை அடுத்து ஸ்ரீதேவி பூதேவி சமேதராக வல்லிபுரநாதர் உள்வீதி வலம் வரும் திருக்கோலக் காட்சி இடம்பெறும். (ஓ-36)

## சமய தீட்சை வழங்கலும் கார்த்திகை விளக்கீடு உற்சவமும்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங் கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெற்று பிற்பகல் 2 மணிக்கு கும்ப பூசையுடன் விளக்கீட்டு உற்சவம் ஆரம்பமாகி சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெற உள்ள தாக ஆலய தொண்டர் சபை அறிவித்துள்ளது. (ஓ)

## முதுமாணிப் பட்டம் பெறும் மூன்று தமிழரின் விபரம்

(யாழ்ப்பாணம்)

ரஜரட்டைப் பல்கலைக்ழகத்தில் வியாபார முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் பெற்ற 36 பேரில் மூவர் தமிழர்கள். இவர்களுக்கான பட்டமளிப்பு விழா கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது.

வியாபார முகாமைத்துவ முதுமாணிப் பட்டம் பெற்ற தமிழர்களின் பெயர் விபரம் வருமாறு, க.கமலரூபன் (யாழ்ப்பாணம்), எஸ்.பத்மதனேஸ்வரன் (யாழ்ப்பாணம்), ரி.விஜயகுமார்(மட்டக்களப்பு. (ஓ-6)

## கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா?

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகமாக நடைபெற்று வருவதாகவும் இவற்றைக் கட்டுப் படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா? என்றும் அப் பகுதி மக்கள் எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இக் கசிப்பை அருந்தி பலர் கொடிய நோய்க்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஓ-134)



கோண்டாவில் ஸ்ரீசபரீச ஐயப்பன் தேவஸ்தான ஆலய தேர்த் திருவிழாவின் போது அடியார்கள் புடைசூழ சுவாமி தேரில் வரும் காட்சியையும், பஜனையில் ஈடுபடும் பக்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: மயில் (றமேஸ்குமார்)

# இலங்கையில் தமிழர் 6

இலங்கையில் ஆரியர் குடியேறிய நிகழ்ச்சியுடன் வரலாறு ஆரம்பித்தது என்ற கருத்து பேராசிரியர் பரணவிதான இலங்கை வரலாறு பற்றி எழுது முன்னரே நிலவிய ஒரு கருத்தாகும்.எனினும், அக் கருத்துக்கு அதிகாரம் வழங்கும் வகையில் பேராசிரியர் எழுதிய 'Aryan Settlements:The Sinhalese' என்ற அத்தியாயம் அமைந்தது.

அவர் இதை எழுதிய பின், அடுத்து வந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை வரலாறு பற்றி எழுதிய இளம் வரலாற்றாசிரியர்கள் ஆரியர்குடியேற்றம் பற்றிய கருத்தைக் கைவிட முடியாதவர்களாய் இருந்தனர்.

இந்த இளம் ஆய்வாளர்கள் பொதுவாக மேல்நாட் டுப் பல்கலைக்கழகங்களில் ஆய்வுப் பயிற் சியைப் பெற்றவர்களாக இருந்தனர். அப் பல்கலைக்கழகங்களில் ஆரியர் பற்றிய இனவாதக் கருத்துக்கள் ஏற்கப்படாதவை யாக இருந்தபோதிலும், இலங்கையில் ஆதி காலத்தில் ஆரியர் குடியேற்றம் நடைபெற்றது என்று கூற இவர்கள் தயங்கவில்லை.

பேராசிரியர் பரணவிதான எழுதிய வரலாறு இலங்கைத் தமிழர் வரலாற்றைப் பற்றிய கண்ணோட்டங்களையும் பாதித்தது. குறிப்பாக,இற்றைக்கு 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மன்னனாகிய எல்லாளனுக்கும் சிங்கள மன்னனாகிய துட்டகாமினிக்கும் இடையில் நடைபெற்ற போராட்டத்தை விரிவாக வர்ணித்து எழுதிய பேராசிரியர், அக்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழர் இலங்கைக்கு அன்னியர் என்றும், துட்டகாமினியின் போராட்டம் ஒரு விடுதலைப் போராட்டம் என்றும் கருதுவதற்கு இடமளிக்கும் வகையில் இப் போராட்டத்தை விளக்கியுள்ளார்.

### பேராதனை வரலாற்றறிஞர் குழு

இலங்கையில் பேராசிரியர் பரணவிதானவின் செல்வாக்கு மேலோங்கியிருந்த பின்னணியில் பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இலங்கை வரலாற்றை நவீன அறிவியில் முறைப்படி ஆய்வு செய்யும் அறிஞர் குழு ஒன்று உருவாகியது. இக் குழுவைப் பேராதனை வரலாற்றறிஞர் குழு என அழைக்கலாம்.

இக்குழு அறிவியல் நோக்குடன் வரலாற்றய்வினை அணுகிய போதும், பேராசிரியர் பரணவிதான தெரிவித் திருந்த கருத்துக்களுக்கு முரணாகச் செல்ல முடியாத அளவுக்குப் பேராசிரியர் செல்வாக் கினால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பேரா சிரியர் கருத்துக்கள் சிலவற்றை இக் குழு வினர் ஏற்காத நிலையிலும் வெளிப்படை யாக அவற்றை எதிர்க்கத் தயங்கினர்.

### பேராசிரியரின் அபூர்வக் கண்டுபிடிப்பு

பேராசியர் பரணவிதான 1960களில் அறிஞர் உலகைத் திகைக்க வைக்கும் கண்டுபிடிப்புக்கள் சிலவற்றைப் பற்றி அறிவித்தார்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுத் தகவல்களை கொடுக்கும் பல கல்வெட்டுக்களை தான் கண்டுபிடித்திருப் பதாக அவர் கூறினார். ஆனால் பொதுவாக கல்வெட்டுக்கள் எனப் பலரும் அறிந்துள்ள கல்வெட்டுக்களுக்கும் இவற்றுக்கும் இடையில் ஒரு பெரும் வேறுபாடு இருந்தது. இவை, முன்னரே கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்ற கற்களில் முன் எழுதப்பட்ட எழுத்து வரிகளுக்கு இடையில் கண்ணுக்கும் இலகுவில் தெரியாதவாறு மிக நுண்ணிய எழுத்துக்களால் எழுதப்பட்டிருப்பதாக அவர் அறிவித்தார். அவற்றுக்கு ' வரி இடைப்பட்ட கல்வெட்டுக்கள்' (Interlinear Inseriptions) என்ற வர்ணணை வழங்கப்பட்டது. இதனைக் காட்டிலும் நம்ப முடியாதளவுக்கு அமைந்தது என்னவெனில் அவற்றின் பொருள் பற்றி பேராசிரியர் கூறியது.

இக் கல்வெட்டுக் களிலே பல நாடுகளின் வரலாற்றை விரி வாக எடுத்துக் கூறும் முழு நூல்களே இருப் பதாக அவர் கூறினார். அத்துடன் நில்லாது, பேராசிரியர் அவற்றை முழுமையாகப் படித் தும் வெளியிட்டார்.

இப்படியான நம்பமுடியாத கல்வெட்டுக்கள் இருப்பதே பேராதனை அறிஞர் குழு ஏற்கத் தயங்கியும்,பேராசிரியர் கூற்றினை மறுக்க விரும்பவில்லை.

இலங்கை அரசின் தொல்லியல் ஆய்வுத் திணைக்களத்தில் கடமையாற்றிய தொல்லியலாளரும் இத னை மறுக்கவில்லை. இந் நூலாசிரியர் இக் கல்வெட்டுக்கள் இருப்பதை ஏற்கமுடியாது எனக் கூறியபோது, பேராசிரியர் சீற்றத்துக்கு இலக்காகினார்.

இலங்கைத் தொல்லியலாளரும் வரலாற்றறிஞர்களும் பிற ஆய்வாளர்களும் வெளிப்படையாக பேராசிரியர் பரணவிதானாவின் கூற்றுக்கு சான்று எதுவும் இல்லையென மறுப்புரை தெரிவிக்க சில ஆண்டுகள் சென்றன.

இறுதியில், 'வரியிடைப்பட்ட கல்வெட்டுக்கள்' என்பவை இல்லை என்பது இறுதியாக்கப்பட்டது. இதன் விளைவாக பேராசிரியர் அதுவரை அனுபவித்த கீர்த்தி பெரிதும் சேதமடைந்து அவருடைய செல்வாக்கும் கட்டுப்படுத்தப்பட்டது.

### பேராதனை அறிஞர் குழுவின் எழுச்சி

பேராசிரியருடைய செல்வாக்கு மங்கிய பின் 1970களில் பேராதனை அறிஞர் குழு புதுவழிகளில் சென்று வரலாற்றாய்வு களில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.கடந்த 20 ஆண்டுக் காலத்தில் கடும் அரசியல் பிரச்சினைகள் இலங்கையில் ஏற்பட்டபோது, சிலர் வரலாற்றை திரித்துக் கூறியதும் அரசியல் தேவைகளுக்காக பிழையாகப் பயன்படுத்தியும், வரலாற்றியலின் வளர்ச்சிக்கு பாதகம் விளைவித்தனர் இப்படியான நெருக்கடி மிகுந்த கட்டத்தில் அதிர்ஷ்டவசமாக தவறான போக்கினை எதிர்க்கவல்ல சில அறிஞர்கள் சிறப்பாக பேராதனை அறிஞர் குழுவில் இருந்தனர்.

அறிவியல் நோக்குடையோராய் மட்டுமின்றி வரலாறு, தொல்லியல் மற்றும் பிறர் தொடர்புடைய அறிவுத் துறைகளில் தேர்ச்சி பெற்றோராய்,சிங்கள மூலாதாரங்களுடன் தமிழ் மூலாதாரங்களையும் தங்கள் ஆய்வுக்குப் பயன்படுத்துவோராய் வரலாற்றாய்வுக்குச் சிறந்த வழிகாட்டிகளாய் பேராதனைக் குழுவினர் விளங்கினர்.

பேராதனை வரலாற்றறிஞர் குழுவின் முன்னணி ஆய்வாளராகப் பேராசிரியர் லெஸ்லி குணவர்தன விளங்களினார் என்பதில் ஐயமில்லை.

இக்குழுவில் சிறப்பிடம் பெற்ற இன்னொருவர் பேராசிரியர் ஸுதர்ஷன் ஸெனெவிரத்ன. இவர் எழுதிய பாரிய ஆய்வுரையாகிய Social Base of Early Buddhism in South East India and Sri Lanka என்ற கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுரை இலங்கையின் ஆதிவரலாற்றுக்குப் புதிய விளக்கங்களைக் கொடுக்க உதவியது. பேராதனைக்கு வெளியே செயலாற்றிய இரு அறிஞர்கள் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்கள் கலாநிதி ஸிரான் தரணியகல மற்றும் பேராசிரியர் ஸேனக பண்டாறநாயக்க ஆகியோராவர். பேராதனையில் வரலாற்றைக் கற்றுப் பின்னர் களனிப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராகக் கடமையாற்றிய அமரதாஸ லியனகமகே என்பவரும் பேராதனைக் குழுவினருடன் வைத்தெண்ணத் தக்கவர்.இவர்கள் அனைவரும் ஆய்வுசெய்து வெளியிட்ட நூல்களும் கட்டுரைகளும் இந் நூலுக்குப்பெருந்துணையாய் இருந்துள்ளன.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

### இனக்குழுப் போராட்டமும் வரலாற்றாய்வும்

வரலாற்றியல் ஆய்வுகளுக்கு ஓர் உயர்ந்த தரத்தைப் பேராதனை அறிஞர் குழு கொடுத்து வழிகாட்டியபோதும், நாட்டில் இனக் குழுக்களிடையே நெருக்கடி கூடிச் செல்ல, இனப் பக்கச் சார்பும் தேசியப் பக்கச் சார்பும் அறிஞர் வெளியீடுகளைப் பாதித்தன. படிப்படியாக இந்நிலை வளர்ந்து மிகவும் வெளிப்படையாக இனக் குழுக்களுக்கு எதிரான வெறுப்பினையும் காட்டின.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே எழுதப்பட்ட வரலாறு பற்றிய படைப்புக்களிலேயே இனக்குழு வேறுபாடுகளை வளர்ப்பதற்கு வித்திடப்பட்டது.

இலங்கையை அப்பொழுது ஆண்டு கொண்டிருந்த பிரித்தானிய காலனித்துவ வல்லரசிடமிருந்து படிப்படியாக கூடுதலான அதிகாரத்தை இலங்கையர் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுவதைக் கண்டதும் ஒவ்வொரு இனக் குழுவும் தத்தமக்குக் கூடுதலான உரிமைகளைப்,பெற்றுக்கொள்ள முனைந்தனர்.

(தொடரும்)

# சமூக நிறுவனங்களுக்கான நிர்வாகமும் முகாமைத்துவமும் 13

### சமூக மட்ட அமைப்பில் இருக்க வேண்டிய ஆவணங்கள்

அங்கத்தவர் தொடர்பானது



- அங்கத்தவர் விண்ணப்பப் படிவம்
- அங்கத்தவர் பெயர்ப்பட்டியல் வெளித்தொடர்பு கள் தொடர்பானவை.
- கடிதங்கள் உள்வரவு
- கடிதங்கள் வெளிச் செல்லல்
- கிடைக்கப் பெற்ற அறிக்கைகள்
- அரச ஏனைய அமைப்புக்களின் சுற்று நிருபங்கள்
- தொடர்புபட்ட நிறுவன விபரங்கள்

நிதிச் செயற்பாடு தொடர்பானவை

- பற்றுச் சீட்டுக்கள்
- செலவுறுதிப் பத்திரங்கள்
- வரவு, செலவுக் காசேடுகள், பேரேடுகள் (தனியார் பேரேடு – சேமிப்பு, கடன்)
- சில்லறைக் காசேடு
- மாதாந்த காசறிக்கை, பொதுப்பேரேடு, பரீட்சை மீதி.
- ஐந்தொகை, வருமானக்கூற்று நிதி சார் முன்னேற்ற அறிக்கை
- காசோலைகள்,வங்கிக் கூற்று அறிக்கைகள்.
- காலத்துக்குக் காலம் தயாரிக்கப்படும் நிதி அறிக்கைகள்.

ஸ்தாபன ரீதியான ஆவணங்கள்

- அடிப்படை விதிமுறைகள், யாப்பு.
- பதிவுச் சான்றிதழ், பிரதிகள்.
- வேலைத் திட்டங்கள்.
- கூட்ட அறிக்கைகள், குறிப்புக்கள்.

கருத்திட்டம் தொடர்பானது

- தேவை மதிப்பாய்வு அறிக்கைகள்
- நிதி பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவின் நகல்
- நடைமுறையில் உள்ள கருத்திட்டங்களின் வேலைத்திட்டங்கள்
- கருத்திட்டத்தின் ஊழியர் பொறுப்பானவர்களின் விபரங்கள்
- கொடையாளிகள் நிதி வழங்குனர்களுடனான ஒப்பந்தத்தின் நகல்கள்.
- கருத்திட்ட முன்னேற்ற அறிக்கைகள்.
- கருத்திட்ட நிதியறிக்கைகள்.
- கருத்திட்ட கண்காணிப்பு அறிக்கைகள்.
- கருத்திட்ட மதிப்பாய்வு அறிக்கைகள்.

நுண்நிதிச் செயற்பாடுகள் தொடர்பானவை

- அங்கத்தவர் சேமிப்பு விபரக் கோவைகள்
- சேமிப்புப் புத்தகங்கள்
- கடன் விண்ணப்பங்கள்
- கடன் கொள்கை அறிக்கைகள்
- கடன் ஒப்பந்தங்கள்
- கடன் மீளளிப்பு பதிவுகள்

*ஏனையவை*

- துண்டுப் பிரசுரங்கள்.
- செய்திக் கடிதங்கள்.
- கிராமிய அபிவிருத்தி சம்பந்தமான பத்திரிகை கட்டுரைகள்.
- பயிற்சிக் கையேடுகள்.
- கொடையாளி தொடர்புகள்.
- அரசாங்க அதிகாரிகளின் விபரங்கள்.

### காரியாலய ஒழுங்கமைப்பு (Office Arrangement)

காரியால யமானது அங்கத்தவர்களும் வாடிக்கை யா ளர்களும்அடிக்கடிவந்துபோகும் இடமாகும். எனவே அத்தகைய இடம் அழகானதாகவும் அங்கத்தவர்கள்/வாடிக்கையாளர்கள் தமது அலுவல்களைச் செய்து கொள்வதற்கு வசதி யானதாகவும் இருத்தல் வேண்டும்.

அத்துடன் காரியாலயம் பாதுகாப்பான இடத்தில் அமைந்திருப்பதுடன் மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

காரியாலயம் அமைந்துள்ள இடம் பாதுகாப்பற்றது, எவ்வித ஒழுங்கும் அற்றது என்ற எண்ணம் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.காரியாலயத்தின் அமைவிடமும் காரியாலய ஒழுங்கமைப்பும் அங்கத்தவர்களின் மனதில் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடியவையாகும்.

காரியாலயஒழுங்கமைப்பில் பின்வரும் சில வழிகாட்டல் கள் கவனிக்கப்பட வேண்டும்.

- வாடிக்கை யாளர்கள் காத்தி ருக்கும் வேளை யில் அமர்வதற்கான வசதி யிருத்தல் நல்லது.
- கோவைகளை அதற்குரிய அலுமாரியில ஒழுங்குமுறையில அடுக்கி வைக்கவேண்டும். அடிக்கடி பயன்படுத்தும் கோவைகளை வேறாக வைக்கலாம்.
- காரியாலய மேசை சீராக அமைக்கப்பட்டு வாடிக்கையாளர்களுடன் வசதியாக அமர்ந்து பேசக்கூடியதாக (கொடுக்கல், வாங்கல்களின் போது) ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- அலுமாரிகள் சுவரோரமாக வைக்கப்படல் நல்லது. அமைப்பின் வளர்ச்சி தொடர்பான விபரங்கள் தெளிவாக சுவர்களில் காட்சிப்படுத்தப்பட்டிருத்தல் நல்லது.இது வாடிக்கையாளர்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளக் கூடியவகையில் அமைந்திருத்தல் நல்லது. (உ+ம்) வரைபுகள்
- காரியாலயம் சுத்தமாகக் காணப்பட வேண்டும்.

தி. திருசாந்
SOND நிறுவனம்
யாழ்ப்பாணம்

- நிர்வாக உறுப்பினர்களின் பெயர்கள் சுவரில் காட்சிப்படுத்தப்படல் நல்லது.
- அமைப்பின் குறிக்கோள், நோக்கம், செயற்றிட்டம் என்பன காணப்படல் வேண்டும்.
- முடிந்தால் எவ்வித செலவுகளும் அற்ற வகையில் காரியாலயத்தை அலங்கரிக்கலாம்.

(தொடரும்)

# குழந்தைப் பருவத்தில் கூடிய ஊட்டச் சத்து தேவை

குழந்தைப் பருவம் என்பது கற்றுக் கொள்ளும் பருவம் மட்டுமல்ல இப்பருவத்தில் அவர்கள் உண்ணும் அல்லது குழந்தை களுக்கு நாம் அளிக்கும் சத்தான உணவு வகைகளே அவர்களின் எதிர்கால நோய் எதிர்ப்புக்கு மிகவும் வலுசேர்க்கிறது.

அந்த வகையில் குழந்தை பிறந்து திட உணவுப் பொருட்களை சாப்பிடத் தொடங்கும் 1 வயது முதல் 5 அல்லது 6 வயது வரை யிலான பருவத்தில் சத்துணவுகளை கார் போஹை தரேட், புரோட்டீன் நிறைந்த உணவுகளை சாப்பிட வைத்தால் தொடர்ந்து அவர்கள் எதிர் காலத்தில் அதுபோன்ற உணவு முறைகளைப் பழகிக் கொண்டு திடகாத்திரமான ஆரோக்கிய வாழ்வை அடைய ஏதுவாகும்.

பொதுவாக குழந்தைகளின் சத்துணவை திட்டமிடுவதில் பெற்றோர் மிகுந்த கண் காணிப் புடன் செயல்படவேண்டும். குடும்பத்தில் உள் ளவர்கள் தனித்தனியாக அமர்ந்து சாப்பிடு வதைக் காட்டிலும் நேரம் கிடைக்கும் போது ஒரே நேரத்தில் ஒன்றாக அமர்ந்து உண்ணுதல் நலம்.

சாப்பிடத் தொடங்கும் முன் சாதாரண காய் க்கறிகளின் சலாட், வேகவைத்த உருளைக் கிழங்கு போன்றவற்றை தயாரிக்கவோ அல்லது சாப்பாட்டு மேசையை சரி செய் யவோ குழந்தைகளுக்கு பயிற்சி அளிக் கலாம். இதன் மூலம் அவர்களுக்கு உணவு வகை களின் மீது நாட்டம் ஏற்படவும், அவர்கள் எதிர் காலத்தில் எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவு வகைகள் எவை என்பதை அறிந்து உண்பதற் கும் பழக்கப்படுவர்.

சாப்பிடும் போது ஆரோக்கியமான உணவு வகைகள் எவை என்பது பற்றியோ, சத்தான உணவுகள் குறித்தோ எடுத்துக் கூறலாம்.

பொதுவாக 2 வயது முதல் 20 வயது வரையிலான காலத்தில் தான் மனித உடலில் மிகப்பெரிய வளர்ச்சி காணப்படும். குறிப்பாக தசைகள், எலும்புகள் வலுவாகவும், நீட்சித்தன்மை கொண்டதாகவும் உருமாறுகின்றன. மனிதர் களின் உயரமும் இந்த கால கட்டத்தில் தான் நிர்ணயிக்கப்படுகிறது. உடல் எடையைப் பொறுத்த வரை 5 மடங்குவரை அதிகரிக்கக் கூடும்.

பெண்களுக்கு சுமார் 10 முதல் 15 வயது வரையிலும், ஆண்களுக்கு 12 வயது முதல் 19 வயது வரையிலான காலத்திலும் பாலி யல் தொடர்பான உறுப்புகளில் வளர்ச்சி மற் றும் முதிர்ச்சி ஏற்படுகிறது.

இதன் காரணமாக உடற்பகுதியின் புறத் தோற்றத்திலும் பெரிய அளவிலான மாற்றம் இந்த வயதில் ஏற்படுகின்றது.

பொதுவாக 2 வயதான ஒரு குழந் தைக்கு அன்றாடம் 1,300 கலோரி அளவி ற்கு சக்திதேவைப்படுகிறது. 5 வயதான குழந்தைக்கு தினமும் 1,700 கலோரி சக்தியும், 16 வயது நிரம்பிய ஆண், பெண் இருபாலருக்கும் தலா 2200 கலோரி அளவுக்கும் சக்தி தேவைப் படுகிறது. குழந்தைகளின் உயரம், எடை, பாலி னம், அவர்களின் செயல்பாட்டு நிலைமை போன்றவற்றைப் பொறுத்து உணவுப் பொருள் கலோரியின் அளவு மாறுபடுகிறது.

பெரும்பாலான குழந்தைகள் தங்களின் திறனுக்கேற்ற உணவு அளவை அவர்களே நிர்ணயித்துக் கொள்கிறார்கள் என்பதால், அந்த அளவு உணவில் போதிய ஊட்டச் சத்து இருக்குமாறு பார்த்துக் கொள்வது பெற்றோரின் கடமை.

கட்டாயப்படுத்த வேண்டாம். கூடுமான வரையில் அவர்கள் அதிக உணவை சாப்பி டுமாறு பெற்றோர் கட்டாயப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். பொதுவாக குழந்தைகளு க்கு மிகக் குறைவான அளவு சத்து ணவை பரிமாறுங்கள். தொடர்ந்து தேவைப்பட்டால் அவர்களே தேவையானதை தேர்ந்தெடுத்து சாப்பிடுமாறுபழக்கவும். அதன்மூலம் உடல் எடை அதிகரிப்பை கட்டுப்படுத்தலாம். அதிக எடை போன்ற தொந்தரவால் அவர்கள் வாழ் நாள் முழுவதும் சிரமப்பட நேரிடலாம்.

1 வயதான ஒரு குழந்தையின் வளர்ச்சி வீதம் அவர்களின் சாப்பிடும் திறனைப் பொறுத்து மாறுபடுகிறது இதன் காரணமாக குழந்தைப் பருவத்தில் திடீர் வளர்ச்சி மற்றும் திடீர் மாற்றமின்மை போன்ற நிலை ஏற்படு கின்றது. ஒரு குழந்தை ஒரு சில நாட்களில் அதிகம் சாப்பிடுவதும் அதற்கு அடுத்த நா ளில் போதிய அளவு சாப்பிடாததும் இயற் கையான ஒன்றே.

அடொலெசென்'_ எனப்படும் டீன் - ஏஜ் பருவத்தில் பொதுவாகவே குழந்தைகள் அவர்கள் எந்த பாலினராக இருந்தாலும் சற்றே அதிக அளவு உணவினை எடுத்துக் கொள் வார்கள் என்பது வாடிக்கையே. அதே நேரத் தில் இப் பருவத்தில் காலை உணவை தவிர்ப் பது, மதிய உணவை பள்ளியில் உண்பது, பாஸ்ட் புட் கடைகளில் சாப்பிடுவது, சிற்றுண் டிப் பொருட்களான ஸ்னேக்ஸை இரவு தூங் கும் வரை கொறித்துக் கொண்டிருப்பது போன்றவற்றால் பின்னாளில் உடலுக்கு பேராபத்து ஏற்படலாம்.

அன்றாட கலோரி சக்தி தேவைக்காக போதிய கார்போஹைதரேட்ஸ், புரோட்டீன், விற்றமின், கொழுப்பு உணவு வகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.



ஃப்ரஷ் அல் லது காய்ந்த பழங்களின் சாறு கள், பச்சைக் காய் கறிகள், தானிய வகைகள் பாலா டைக்கட்டி, பாப் கார்ன் போன்ற உடலுக்கு ஆரோக் கியம் அளிக்கக் கூடிய வகையி லானவற்றை ஸ்னேக்ஸ் ஆக வாங்கி குழந்தை களுக்கு அளிக்கலாம். இவற்றில் சர்க்கரை, கொழுப்பு, உப்புச் சத்துகள் அதிக அளவில் உள்ளன. இவை தவிர விட்டமின் மற்றும் கனிமங்கள் அதிகம் உள்ள ஸ்னேக்ஸ்களை வாங்கிக் கொடுப் பீர்களானால் அவர்களுக்கு தவறான உணவுப் பழக்க முறையை ஏற்படுத்துவீர்கள் என்று அர்த்தம்.

ஒரு வயது நிரம்பிய குழந்தைகளுக்கு ஒரு மணி முதல் ஒன்றரை மணிக்கு ஒரு முறை உணவு மட்டுமன்றி ஊட்டசத்துள்ள பொருட் களை 5 அல்லது 6 முறை அளிக் கலாம். அவர்களின்வயிறு சிறிதாக இருப்பதால் இடை வெளி விட்டு உணவினை அவ்வப்போது அளிப்பது நன்று. குழந்தைகள் எதை விரும்பி சாப்பிடுகிறார்களோ அவற்றை வழங் கவும். பொதுவாக எந்த வயதினராக இருந் தாலும் பேக்கரி உணவு வகைகளை சாப்பிடு வதால் உடலுக்கு தீங்கு நேராது. அதிக கொழுப் பை தவிர்த்தல்நலம். பொதுவாகவே குழந்தைகள் புதிது புதிதாக வகை வகையான உணவுப் பொருட்களை விரும்பி உண்பார் கள். அப்படி உண்ணும் போது பிரட் வகைகள், பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்றவை முக்கியமாக உணவில் இடம் பெறுவனவாக இருக்கட்டும்.

மாமிசம், மீன், பால், அவரை விதை போன்ற

## சத்துணவைத் தேர்ந்தெடுத்து கொடுக்க வேண்டியது தாயின் கடமை

புரோட்டீன் நிறைந்த பயறு வகைகள், 4 வயது முதல் 9 வயது வரையிலான குழந்தை களுக்கு அளிக்கலாம். 2 அல்லது 3 பால் பொருட்களை இவர்கள் அன்றாடம் உணவுடன் எடுத்துக் கொள்ளலாம்.

குழந்தைகள் அனைத்து வகை பச்சைக் காய்கறிகளையும் சாப்பிட அனுமதியுங்கள். கலர்புலான காய் வகைகளை அவர்கள் கண் களில் படும்படி வையுங்கள். தவிர வித வித மான சத்துள்ள பொருட்களை வைத்து அவர் கள் எது வேண்டுமோ அவற்றை விரும்பி சாப்பிடுமாறு செய்யுங்கள். பொதுவாக 2 வயது முதலே அவர்களின் விருப்பத்திற் கேற்ப உணவு வகைகளை அவர்களாகவே சாப்பிடப் பழக்குங்கள். கொழுப்பு நிறைந்த உணவு வகைகளை அதிகம் சாப்பிடுவதற்கு பழக்க வேண்டாம்.

சாதாரணமாக குழந்தைகள் வளர்ச்சி மற்றும் உயரத்திற்கு இரும்புச் சத்து என்பது அவசியமானதாகிறது. துரதிஷ்டமாக பெரும் பாலான குழந்தைகளுக்கு இரும்புச் சத்து குறைவாக காணப்படுகிறது. இதற்குக் கார ணம் இரும்புச் சத்துள்ள உணவுப் பொருட் களை மிகக் குறைந்த அளவு அவர்கள் எடுத் துக் கொள்வதே.

சத்து நிறைந்த உணவுப் பொருட்களை அளித்து குழந்தைகள் வாழ்வில் ஆரோக் கியத்தை உரித்தாக்குவோம்.




# கர்ப்பிணி தாய்மார்களுக்கு 'அன்றாடிக்' மருந்துகளால் ஆபத்து

நாற்பத்து ஐந்து வயது வரை பெண் களுக்கு இருதயக் கோளாறு வராது. ஈஸ்ட் ரோஜன் சுரப்புக் குறைந்து மாதவிடாய் நிற்கும் .மொனோபாஸ் பருவத்திற்கு முந்தைய பருவத்தில் இருந்து தான் பெண்களுக்கு இரு தயக் கோளாறுகள் வருவதற்கான வாய்ப் புகள் அதிகம் என்று கூறப்பட்டது. ஆனால், தற்போது நிலைமை மாறிவிட்டது.

இளம் வயதிலேயே இருதயக் கோளா றுகளால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணி க்கை அதிகமாகிவருகிறது.

இருதயக் கோளாறுகள் ஏற்படுவதில் இரண்டு வகைகள் உண்டு. பிறவியிலேயே ஏற்படுவது ஒரு வகை. பிறந்த பிறகு பல்வேறு காரணங்களால் ஏற்படும் இருதய நோய்கள் இன்னொருவகை. கருவில் குழந்தை உரு வானவுடன் முதலில் முழுமையாக உரு வாகும் உறுப்பு இருதயம் தான். இருதயம் வளர்ச்சி அடையும் பருவத்தில் தாய்க்கு வைரஸ் தொற்று இருந்தாலோ, சின்னம் மை, தட்டம்மை, போன்ற நோய்களால் பாதிக்கப் பட்டு இருந்தாலோ அல்லது கருவில் குழந் தை இருக்கும் முதல் மூன்று மாதத்தில் டாக் டரின் ஆலோசனை இல்லாமல் அதிகமாக ஆன்டிபயாடிக் மருந்துகள் சாப்பிட்டாலோ, கருவின் இருதயத்தில் பாதிப்பு ஏற்பட்டு பிறவி இருதயக் கோளாறுகள் ஏற்படுகிறது. நம் பழக்க வழக்கங்களால் தினசரி வாழ்க்கையில் ஏற்படும் டென்ஷன், இரத்தக் கொதிப்பு, மன அழுத்தம், உடல் எடை அதிகரி த்தல் போன்ற காரணங் களால், மெனோபாஸ் கட்டத்திற்குச் செல் வதற்கு முன்பாகவே பெண்களுக்கு இருத யக் கோறுகள் ஏற்படுகின்றன.

## கருவில் இருக்கும் குழந்தைகளை இது பாதிக்கும்



அம்மியில் உரைத்து, ஆட்டுக் கல்லில் அரைத்து, உரலில் இடித்து, வீட்டைப் பெருக்கித் துடைத்து உடலில் சதை ஏறாமல் பார்த்துக் கொண்ட காலம் மலை ஏறிப் போய் விட்டது.

இப்போது எல்லா வற்றுக்கும் மெஷின் தான்.

பெரும் பா லான பெண்கள் வேலைக் குச் செல்வதால், முழுதாய் எட்டு மணி நேரம்'சீட்'டை விட்டு எழுந்திராமல் வேலை செய்வது பெரும் பிரச்சினையாகி விடு கிறது.

இது ஆண், பெண் இருபாலாருக்கும் பொ ருந்தும் என்றாலும், வேலை இடத்தில் ஏற் படும் பிரச்சினை களால் உருவாகும் மன உளைச்சல், இரத்தக்கொதிப்பு ஆகியன நாளடைவில் உடல் நிலை பாதிப்பை உருவாக்கி விடுகின்றன. இவற்றோடு, சரியான நேரத்தில் உணவு உண்ண முடியா மல் போகுதல், எண்ணெய் அதிகம்சேர்த்த உணவுப் பொருட்களைச் சாப்பிடுதல், நொறுக்குத் தீனி போன்றவற் றாலும் உடல் நிலை பாதிக்கப்படுகிறது. இவற்றின் மொத்த உருவாக இருதயக் கோளாறும் ஏற்படுகிறது.


தொகுப்பு :- ஜெசி

# ஆஸ்பிரின் மாத்திரை :- ஓர் எச்சரிக்கை

இரத்தம் கட்டிக்கொண்டு இரத்த நாளத் தை அடைத்துக்கொள்வதை தடுக்க உதவு கிறது ஆஸ்பிரின் மாத்திரை. அத்தோடு மாத் திரையை இருதயநோயளிகள் தினமும் எடுத்துக்கொண்டால். மாரடைப்பு, பக்கவாதம் ஆகியவை ஏற்படும் அபாயமும் தடுக்கப் படும். மேலும் கோலோன் கேன்சர் எனப்படும் ஒரு வகைப் புற்று ஏற்படாமல் தடுக்கிறது.

இந்த மாத்திரை வாடிக்கையாக எடுத்துக் கொள்ளும் நோயாளிகள் திடீர் என்று நிறுத் தினால் அது மாரடைப்பை ஏற்படுத்தும். ஒரு வாரத்துக்குள் ஆஸ்பிரினை நிறுத்திய 51 நோயாளிகளுக்கு மாரடைப்பை அல்லது தாங்கமுடியாத நெஞ்சுவலியோ ஏற்படும் என்று பிரெஞ்சு ஆராய்ச்சியாளர்கள் கூறி னர்.

ஆஸ்பிரினை நிறுத்தியதால் ஏற்படும் விளைவுகள் பற்றி மேலும் ஆராய வேண்டும் என்று பிரான்ஸ் நாட் டைச் சேர்ந்த டாக்டர் எமிலி கூறியிருக் கிறார்.



இருதய நோயாளிகள் பல் வலிக்காகவோ அல்லது வேறு ஏதாவது நோய்க்காகவோ அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கு முன்பு ஆஸ்பிரின் மாத்திரை எடுத் துக் கொள்வதை நிறுத்தும்படி டாக்டர்கள் சொல்வது வழக்கம். ஆஸ்பிரினை நிறுத்தா விட்டால் இரத்தக்கசிவு அதிகமாகும். இதனால் ஆஸ்பிரினை நிறுத்தச் சொல்வார்கள். டாக்டர் கள் அது போல அட்வைஸ் செய்யக் கூடாது. இரத்தக் கசிவை கட்டுப்படுத்த ஆஸ்பிரினை நிறுத்தாமல் மாற்று யோசனை வேண்டும் என்றும் டாக்டர் எமிலி கூறினார்.

# கை விரல்கள் நடுங்குகின்றனவா?

விரல்களை நீட்டும் போதும் பொருட் களை கையால் எடுக்கும் போதும் விரல்கள் நடுங்கும். இளைஞர்களுக்கு கூட இந்த நடுக்கம் ஏற்படும்.

பயம், பதற்றம், மனக்கவலை, ஏமாற்றம் தோல்வி படபடப்பு போன்ற கைவிரல்களில் உள்ள பிரிவு நரம்புகள் எனப்படும் ஒருவகை நரம்புகளைத் தூண்டிவிட்டு நடுக்கத்தை ஏற்படுத்துகிறது. வேலைகளை வேகமாகவும் அவசரமாகவும் செய்வதும் நரம்பை பாதிக் கும்.

விரல் நடுக்கத்திற்கு மதுபழக்கமும் ஒரு காரணம். மதுவில் உள்ள நச்சுப் பொருட்கள் மூளை நரம்புகளைப் பாதிக்கும். அப்பிரிவு நரம்புகன் மூளையின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு தங்களின் விருப்பப்படி பணி செய்யும். புகைபிடிப்பதும் நடுக்கத்துக்கு முக்கிய காரணம். சிகரெட்டில் உள்ள நிக்கோன் என்ற நச்சுப்பொருள் இரத்தத்தில் கலக்கும்போது நரம்புகள் பாதிக்கப்படும். இதனால் புகைபிடிப்பவர்களுக்கும் கை நடுங்கும்.

தைறொய்ட் சுரப்பி அதிகமாகச் சுரக்கும் போது சர்க்கரை கல்லீரல் நோய் ஆகியவற் றாலும் நரம்புகள் பாதிக்கப்பட்டு நடுங்கும்.

சில நோய்கள் குணமாவதற்காக சாப் பிடப்படும் மருந்துகளாலும் விரல் நடுக்கம் ஏற்படலாம்.

பச்சைக் காய்கறிகளையும், பழங்க ளையும் பருப்பு வகைகளையும் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் விரல் நடுக் கத்தை தடுத்து நிறுத்தலாம்.

தினமும் அரைமணி நேரம் உடற்பயிற்சி செய்தால் நரம்புகள் உறுதிபெறும்.

# யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான

# பாராட்டு விழா 09.12.2008



## 2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகள்

**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)**
தரணியா கந்தகுமார் (120) தர்மியா பாலராஜா (138) ஆராதனா தணிகாசலம் (122) கிருத்திகா சிவசங்கரநாதன் (143) யதுர்ஷிகா ரவிதாசன் (144) கம்சா சுந்தரலிங்கம் (129) தாரணி தயாபரன் (126) மாதுரி கதிரவேலு (158) கேதுஷா கேதீஸ்வரன் (127) அனுபிகா தர்மராஜா (132) சர்வகலா வில்வமூர்த்தி (118) சுஜிதா சுரேஸ் (117) சுவஸ்திகா தங்கராஜா (133) ஜனனி ஆனந்தராஜா (122) கனிப்பிரியா ரமேஸ் (132)

**நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)** யசிகா ஜெயரட்ணம் (133) விஸ்ணுகா இளமுருகன் (120) ஜிலுக்ஷனா தட்சணாமூர்த்தி (116) அபிராமி விமலராசா (129) கிருஷாந்தி கிருபானந்தன் (133) சிந்துஜா சிவசுப்பிரமணியம் (140) டிற்சிகா சுந்தரலிங்கம் (139) கம்ஷனா கஜேந்திரன் (129) கஜவாணி ஞானேந்திரன் (118) கஜானு ரஞ்சன் (129) கஜானா குணசீலன் (118) தேனுஷா சாந்தலிங்கம் (147) சிவரஞ்சினி மகேந்திரன் (119) கனிஸ்ரியா கருணாகரன் (150)

2008 தோற்றியோர் –87. வெட்டுப்புள்ளி –114. சித்தி– 29. சித்தி–33.33%. 100புளளிக்குமேல் பெற்றோர் – 49 (44.82%)
80 புள்ளிக்கு மேல் பெற்றோர் – 63 (72.41%)
தேசிய மட்டம் 10 ஆம் இடம்: – செல்வி மாதுரி கதிரவேலு

### 2007 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகள்

| | |
|---|---|
| ஜெயபைரவி ஜெயசோதி | *(172)* |
| நிதர்சினி ராமச்சந்திரன் | *(171)* |
| அபிராமி நற்குணம் | *(162)* |
| பிரதீபா வாகீசன் | *(160)* |
| தரண்ஜா கோபாலகிருஷ்ணன் | *(160)* |
| சஞ்சிகா பத்மராஜன் | *(157)* |
| சுகன்யா மனோகரன் | *(155)* |
| ஹம்சாளினி ஸ்ரீதரன் | *(155)* |
| சதுஸ்ரிகா சுபேந்திரன் | *(155)* |
| டிலுக்சனா சுதாகர் | *(151)* |
| கோகுலப்பிரியா கணேசலிங்கம் | *(151)* |
| லட்சியா பஞ்சலிங்கம் | *(148)* |
| விதுசிகா யோகராஜா | *(145)* |
| மதுசா சிவசுதன் | *(144)* |
| சர்மிஜா பாலச்சந்திரன் | *(144)* |
| வினுசியா பஞ்சலிங்கம் | *(142)* |
| அபிசானா சேகர் | *(142)* |
| காவியா சத்திவேல் | *(140)* |
| நளாயினி அழகர்சாமி | *(140)* |
| பிறின்சிகா பிறேம்குமார் ஸ்ருவேட்ஜெவ்றி | *(140)* |
| சர்சா சந்திரராசா | *(140)* |
| சிலக்சா புண்ணியமூர்த்தி | *(140)* |

2007 தோற்றியோர்–90
வெட்டுப்புள்ளி –140
சித்தி–22 (24.44%)
100புள்ளிக்குமேல் வெற்றோர் –70

இடம் :- பாடசாலை மண்டபம்
காலம்:- 2008.12.09 செவ்வாய்க்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி

பிரதம விருந்தினர் :
செல்வி புஸ்பா செல்வநாயகம்
(ஓய்வு பெற்ற ஆசிரியை, உபதலைவி, பழைய மாணவர் சங்கம், யாழ். இந்து மகளிர் கல்லூரி)

யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில்
2008 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்
தோற்றி சித்தியடைந்த 29 மாணவர்களையும், 100
புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும்,
அவர்களின் வெற்றிக்கு அர்ப்பணிப்புடன்
சேவையாற்றிய செயற்றிறன் மிக்க அதிபரையும்
ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

– சித்தியடைந்த மாணவிகளின் பெற்றோர் –

விளம்பர அனுசரணை :
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்தி சங்கம்

C1838

### 2006 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகள்

| | |
|---|---|
| வித்தியா சிவசங்கரநாதன் | *(166)* |
| சுபலக்சுமி செல்வராஜன் | *(161)* |
| சுயோதமி யோகநாதன் | *(159)* |
| அபிராமி சிவகுமாரன் | *(157)* |
| விவேக்கா பாஸ்கரன் | *(156)* |
| தனுசியா யோகரட்ணம் | *(155)* |
| பிரவீணா சதீஸ்குமார் | *(154)* |
| பிரவீணா அருட்செல்வன் | *(154)* |
| வினுஸ்கா சிவகுமாரன் | *(153)* |
| நிலக்ஷாயினி பிறேம்ராஜ் | *(150)* |
| டிலக்சனா தவவிநாயகன் | *(149)* |
| காயத்திரி குணநேசன் | *(149)* |
| சரண்யா லோகநாதன் | *(149)* |
| பவப்பிரியா லோகேஸ்வரன் | *(145)* |
| ஹம்சிகா ரஜனிகாந் | *(141)* |
| தட்ஷாகினி உதயராஜா | *(141)* |
| சண்சிகா கணேசலிங்கம் | *(140)* |
| அகல்யா சந்திரகுமார் | *(138)* |
| பவித்திரா பவானந்தம் | *(138)* |
| மருதிஷா சிவநேசன் | *(138)* |
| கஜானா தவக்குமார் | *(137)* |
| நிஷாந்தினி நவநீதராஜா | *(137)* |
| சிந்துமை யோகராஜா | *(134)* |
| சரண்யா செல்வநேசன் | *(133)* |
| ரம்ஜா விஜயராஜா | *(133)* |

2006 தோற்றியோர்–89
வெட்டுப்புள்ளி –133
சித்தி–25 (28.08%)
100 புள்ளிக்குமேல் சித்தி வெற்[illegible]

# தமிழக தலைவர்களை விமர்சித்த தளபதி பொன்சேகா 24 மணி நேரத்துக்குள் மன்னிப்புக் கோர வேண்டும்

## மன்னிப்புக் கோராவிட்டால் தமிழகம் கொந்தளிக்கும் -டாக்டர் இராமதாஸ்



தமிழகத்தலைவர்களை அரசியல் கோமாளிகள் என விமர்சனம் செய்த இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உடனடியாக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் இராமதாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக இராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் தமிழினப் படுகொலைக்கு காரணமான இலங்கைப் படையினரின் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்று இந்தியா எச்சரிக்கை விடவேண்டும் என அண்மையில் முதலமைச்சர் கருணாநிதி தலைமையில், தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து முறையிட்டு இருக்கிறோம்.

இதனால், ஆத்திரமடைந்துள்ள இலங்கை இராணுவத் தளபதி சரத்பொன்சேகா, தமிழக அரசியல் தலைவர்களை எல்லாம் ஒட்டு மொத்தமாக, அரசியல் கோமாளிகள் எனத் தரம் தாழ்த்தி துடுக்குத்தனமாக விமர்சனம் செய்து தனது இனவெறியை வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது இத்தகைய விமர்சனம் தமிழர்களின் தன்மானத்திற்கு விடப்பட்டுள்ள சவாலாகும்.

இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம். அதில் தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்கள் தான் என்றும், சிங்களவர்களுக்கு அடிமைகளாக வாழ்வதற்கு தமிழர்கள் கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தவர் இவர்.

இப்போது தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் அனைவரையும் கொச்சைப்படுத்தி பேசியிருப்பதன் மூலம் தனது இனவெறியை மீண்டும் ஒருமுறை அடையாளம் காட்டியிருக்கிறார் இலங்கை இராணுவத் தளபதி.

இலங்கையைப் பொறுத்த வரையில் மஹிந்த ராஜபக்ஷ அரச தலைவராக இருந்தாலும், இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா தான் அனைத்து அதிகாரமும் படைத்த சர்வாதிகாரி போன்று பேசியும், செயற் பட்டும் வருகின்றார்.

எனவே, அவர் பேசியிருப்பதைத் தனிப்பட்ட ஒருவரின் விமர்சனம் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. இலங்கையின் குரலாகவே, அரசின் குரலாகவே அவரது விமர்சனத்தை எடுத்துக் கொள்ளவேண்டும்.

எனவே, சரத் பொன்சேகா கோமாளித்தனமான தனது விமர்சனத்தை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டு நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்க வேண்டும். முப் படைகளின் தலைவர் என்ற முறையில் மஹிந்த ராஜபக்ஷவும், பகிரங்கமாக வருத்தம் தெரிவிக்க வேண்டும். இதனை, இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

இன்னும் 24 மணி நேரத்தில் மன்னிப் புக் கேட்கத் தவறினால், இங்குள்ள இலங் கைத் தூதுவரையும், இதர அதிகாரிகளை யும் இந்தியாவில் இருந்து வெளியேற்று வோம் என்று எச்சரிக்கை செய்ய வேண்டும்.

சிங்களப் பீடைத்தலைவரின் இந்தக் காட்டுமிராண்டித்தன விமர்சனத்தை முதலமைச்சர் கருணாநிதி உடனடியாக பிரதமரின் கவனத்திற்கும், வெளியுறவுத்துறை அமைச்சரின் கவனத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.

இலங்கை இதற்காக பகிரங்கமான மன்னிப்புக் கேட்காவிட்டால், தமிழகம் கொந்தளிக்கும் என டெல்லிக்கு எடுத்துக் கூற வேண்டும்.



அத்துடன் வெளியுறவுத் துறை மந்திரி பிரணாப் முகர்ஜியை இன்னும் காலம் தாழ்த்தாமல் 48 மணி நேரத்திற்கு உள்ளாக கொழும்புக்கு அனுப்பி நேரிலும் எச்சரிக்கை விடச் செய்வதுடன், அங்கு தமிழினப் படுகொலைக்குக் காரணமான சண்டை நிறுத்தப்படுவதன் மூலம் தமிழர்களின் தன்மானத்திற்கு இலங்கை போர்ப் படைத் தளபதியால் விடப்பட்டுள்ள அறை கூவலுக்குச் சரியான பதிலடி கொடுக்க வேண்டும்.

அது ஒன்றுதான் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்புளித்து அவர்களை அமைதிப்படுத்த முடியும் என டெல்லிக்கு எடுத்துக் கூற வேண்டும் என்றார் அவர். (ஓ-6)

## பேச்சுவார்த்தை மூலமே இலங்கை பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்

### மணிசங்கர் ஐயர் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை அரசாங்கம் போரை நிறுத்தி விட்டு பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என இந்திய மத்திய அமைச்சர் மணிசங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் நடக்கும் போர் காரணமாக தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு தாம் தயாரில்லை என இலங்கை அரசாங்கம் கூறுகிறது.

எனினும், இலங்கையின் பிரச்சினைக்கு ஆயுதங்கள் மூலம் தீர்வு காணமுடியாது. போரை நிறுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவே, பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும். இதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை செல்ல உள்ளார். அதன்மூலம் சுமுக தீர்வு காணப்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ஓ-6)

# மும்பை தாக்குதலில் பிடிபட்டவர் பாகிஸ்தானியர் என்பது ஆதாரத்துடன் உறுதி

(லண்டன்)

மும்பையில் தாக்குதல் நடத்தி பிடிபட்ட தீவிரவாதியின் குடும்பத் தினர் பாகிஸ்தானில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களை பொலிஸார் பிடித்துச் சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள்.

மும்பைத் தாக்குதலில் பிடிபட்ட ஒரே தீவிரவாதியின் பெயர் மொகமத் அஜ்மல் அமீர் இமான் அவனிடம் நடத்தப்பட்ட விசாரணையில் லஸ்கர் இ தொய்பா இயக்கத்தை சேர்ந்த அஜ்மல் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் ஓகாரா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவன் என்று தெரியவந்தது. அவனுடைய தந்தை பெயர் முகமது அமீர் என்றும் தாயார் நூர் என்றும் அஜ்மல் தெரிவித்திருந்தான்.

ஆனால் மும்பை தாக்குதல் தீவிரவாதிகள் யாரும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று திட்டவட்டமாக மறுத்து வந்தது. இந்தநிலையில் இங்கிலாந்து பத்திரிகையான தி ஒப்சவர் நடத்திய புலனாய்வில் தீவிரவாதி அஜ்மல் பாகிஸ்தானைச் சேர்ந்தவன் தான் என்ற தகவலை ஆதாரத்துடன் உறுதிப் படுத்தி செய்தி வெளியிட்டுள்ளது.

பஞ்சாப் மாகாணம் ஒகாரா மாவட்டத்தில் உள்ள பரீத்கோட் கிராமத்தில் தீவிரவாதி அஜ்மலின் பெற்றோர் இருப்பதை அந்த பத்திரிகையின் நிருபர் நேரில் சென்று உறுதி செய்திருக்கிறார்.

கடந்த 4 ஆண்டுகளாக அஜ்மல் அந்த கிராமத்தில் வசிக்கவில்லை. என்றும் ஆனால் ஆண்டுக்கு ஒரு முறை சொந்த கிராமத்திற்கு வரும்போது காஷ்மீரை இந்திய ஆட்சியிடம் இருந்து விடுவிப்பது பற்றி பேசிக்கொண்டு இருப்பான் என்றும் அந்த கிராமவாசிகள் சிலர் தெரிவித்தனர். மேற்கண்ட தகவல்கள் அப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கிடையில் அஜ்மலின் பரீத்கோட் கிராமத்தை பாகிஸ்தான் பொலிஸாரும் உளவுப்படையினரும் முற்றுகையிட்டு வருகிறார்கள் அஜ்மலின் குடும்பத்தினரை பொலிஸார் பிடித்துச் சென்று இரகசிய இடத்தில் விசாரணை நடத்தி வருகிறார்கள். பாகிஸ்தானின் மூல்டான் டிவிஷனில் பரீத்கோட் என்ற பெயரில் இரண்டு கிராமங்கள் உள்ளன. ஒன்று கனேவால் மாவட்டத்திலும் மற்றொன்று ஓகாரா மாவட்டத்திலும் உள்ளது.

ஒகாரா மாவட்ட கிராமம் தான் அஜ்மலின் சொந்த ஊர் ஆகும்.

அஜ்மலின் தந்தை அமீருக்கு 2 மகன்கள் என்றும் இளைய மகனின் பெயர் அஜ்மலா அல்லது ஆசுமா? என்று நினைவில்லை என்றும் அந்த கிராம இமாம் பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார். அஜ் மலின் வீட்டிற்கு செல்லும் பத்திரிகையாளர்களை தடுக்கும் வகையில் வீட்டிற்கு முன்பாக சாதாரண உடையில் சிலர் நின்றுகொண்டிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஓ-6)

# பாகிஸ்தான் தீவிரவாத குழுக்களுக்கு தடை விதிக்க ஐ.நா.சபைக்கு அமெரிக்கா சிபாரிசு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தீவிரவாத குழுக்களுக்கு தடை விதிக்கும்படி, ஐ.நா. சபைக்கு அமெரிக்கா சிபாரிசு செய்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள உளவுப் படை முன்னாள் அதிகாரி உட்பட சில தனி நபர் கள் மற்றும் தீவிரவாதக் குழுக்களுக்கு தடை விதிக்கும்படி, ஐ. நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு அமெரிக்கா சிபாரிசு செய்ய இருக்கிறது.

இந்த சிபாரிசு பட்டியலில் யார்- யார் பெயர் இடம்பெற்றுள்ளது என்ற தகவல், பாதுகாப்பு கவுன்சிலுக்கு அனுப்பிய பிறகு வெளியிடப்படும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை துணை செய்தி தொடர்பாளர் ராபர்ட் வுட் வாஷிங்டனில் அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே, இதுபோன்ற பட்டியல் எதையும் அமெரிக்கா அனுப்பிவைத்து இருக்கிறதா? என்று கேட்டதற்கு, தற்போதைய சூழ்நிலையில் அதுபற்றிய விவரங்களை வெளியிடுவது உசிதமல்ல என்று அவர் கூறினார்.

தனி நபர்களோ அல்லது தீவிரவாத குழுக்களோ தடை பட்டியலில் இடம்பெற்றுவிட்டால், ஐ.நா. சபையில் இடம்பெற்றுள்ள நாடுகள் அவர்களுக்கு அளித்துவந்த நிதி உதவி முடக்கப்பட்டுவிடும்.

பாகிஸ்தான் உறவு நிறுவனத்தின் (ஐ.எஸ்.ஐ.) முன்னாள் தலைவரும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியுமான லெப்டினன்ட் ஜெனரல் ஹமீதுகுல், மற்றும் அந்த உளவு அமைப்பை சோந்த மூன்று முக்கிய முன்னாள் அதிகாரிகள் இந்த தடைப் பட்டியலில் இடம் பெறுவது நிச்சயம் என்று பாகிஸ்தான் பத்திரிகைகள் சமீபத்தில் செய்தி வெளியிட்டிருந்தன.

1987 முதல் 1989 -ஆம் ஆண்டு வரை ஐ.எஸ்.ஐ. தலைவராக பொறுப்பு வகித்த குல், சோவியத் ரஷியாவுக்கு எதிராக போர் புரிந்த முஜாகிதீன் தீவிரவாதிகளுக்கு உதவி செய்தவர்.

இந்த தீவிரவாத குழுதான் பின்னர். ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து காஷ்மீரில் தீவிரவாதத்தை தூண்டிவிட்டது குறிப்பிடத்தக்கது. அவர் தொடர்ந்து ஜிகாத் போராளிக் குழுக்களுக்கு ஆதரவு அளித்து வருகிறார் . (ஓ-6)

## புஷ்சுடன் மோதிய இராணுவத் தளபதிக்கு புதிய பதவி வழங்குகிறார் ஒபாமா

அமெரிக்க புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒபாமா தனது நிர்வாகத்தில் புதிய அதிகாரிகளை நியமித்து வருகிறார். ஓய்வுபெற்ற இராணுவ வீரர் நலத்துறைக்கு தளபதி எரிக்ஷின்செகியை அவர் நியமித்து இருக்கிறார். ஈராக்குடன் போர் தொடுத்த போது அங்கு கூடுதலாக படையை அனுப்பி வைக்க வேண்டும் என்ற எரிக்கின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால், அதிபர் புஷ்சுடன் மோதல் ஏற்பட்டு தளபதி பதவியில் இருந்து விலகியவர் எரிக் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் இருந்து திரும்பும் நமது படை வீரர்களுக்கு உரிய கௌரவம் அளிக்கும் விதத்தில் எரிக்கை இந்தப் பதவியில் நியமித்து இருப்பதாக ஒபாமா அறிவித்திருக்கிறார். (ஓ-6)

பட்டினி கிடப்பவன்–அவன் எவ்வளவு கண்ணிய மான அரசியல் கருத்துக்களை கொண்டிருந்தாலும் –அபாயகரமான ஆசாமிதான்.

–பெர்னார்ட்ஷா

வலம்புரி

## வெள்ள நிவாரணத்தை துரிதமாக வழங்க வேண்டும்

அண்மையில் பெய்த கடும் மழை, பெரும் புயல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளை துரிதப்படுத்துவது அவசர தேவையாகவுள்ளது.

வெள்ளப் பெருக்கினால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாடசாலைகள் மற்றும் கோவில்களில் தஞ்சமடைந்தவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது.

யாழ்.அரச அதிபரினால் வரையறுக்கப்பட்ட நாட்களுக்கே சமைத்த உணவு வழங்கப்பட்டது.

வெள்ளப் பெருக்கினால் இடம்பெயர்ந்து மீளவும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குவதில் விரைவான செயற்பாடு அவசியமாகவுள்ளது.

ஏனெனில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் எல்லாவற்றையும் இழந்துள்ளதுடன். இவர்களின் நாளாந்த சீவனோபாயமும் பெரும் இடைஞ்சலுக்குள் சிக்குண்டுள்ளது.

அதேநேரம் அன்றாடம் தொழிலுக்குச் சென்று பெற்றுக் கொள்ளும் ஊதியத்திலேயே இவர்களின் வாழ்க்கை நகர்ந்து செல்கிறது.

ஆனால் அண்மையில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கு, புயல் காரணமாக வேலையை இழக்கும் பரிதாபமும் ஏற்பட்டுள்ளது.

எனவே அவர்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்குவதென்பதற்கப்பால், விரைவாக வழங்குவதும் கட்டாயமானதாகும்.

இதுதவிர வெள்ளத்தினால் தொழில் முயற்சியில் பெரும் பாதிப்படைந்தவர்களின் நிலை குறித்துக் கவனமெடுப்பதும் கட்டாயமானதாகும்.

குறிப்பாக வாழைத் தோட்டச் செய்கையாளர்கள், ஒரு கணப்பொழுதில் வருமானத்தை இழந்து அன்றாட சீவியத்துக்கே ஆற்றலைகின்றனர்.

இவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையைக் காலம் கடத்தாமல் உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதனூடாக அவர்களின் குடும்ப சீவியத்துக்கு உதவ முடியும்.

இவை யாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் காப்புறுதி நிறுவனங்கள் காப்புறுதி செய்யப்பட்டு–வெள்ளத்தால் முற்றாக அழிந்த–சேதமடைந்த பொருட்களுக்கான இழப்பீடுகளை வழங்க முன்வரவேண்டும்.

இழப்பீட்டு தொகையை வழங்குவதில் சில காப்புறுதி நிறுவனங்கள் முனைப்புடன் ஈடுபட்டாலும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் அத்தனை காப்புறுதி அமைப்புகளும் இறுக்கமான நிபந்தனைகளை இழக்கி யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய முன்வருவது அவற்றின் தார்மீக கடமையாகும்.

இதனைச் செய்வதன் மூலம் காப்புறுதி அமைப்புகள் யாழ்ப்பாண மக்களின் நம்பிக்கைக்கு ஆளாகமுடியும்.

# புலிகளை ஜனநாயக நீரோட்டத்தில் கலக்கச் செய்தவர் ரணில் விக்கிரமசிங்கவே

## ஐ.தே.க. பா.உ வஜிர அபேவர்த்தன

யுத்தத்தை புத்தசமயம் அடியோடு வெறுக்கின்றது. ஐ.தே.க. ஆட்சியில் யுத்தம் செய்யப்படவில்லையா? நாட்டின் இறைமையைப் பாதுகாப்பது ஆளும் ஆட்சியாளர்களின் கடமையும் பொறுப்புமாகும். அதற்காகவே யுத்தம் செய்து பல பகுதிகளை நாம் மீட்டெடுத்தோம்.

பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டோம் என்று ஐ. தே.கட்சியின் காலி மாவட்ட எம்.பி. வஜிர அபேவர்த்தன பலப்பிட்டியவில் நடைபெற்ற ஐ.தே. கட்சிக்கூட்டத்தில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் கிழக்கில் பாதுகாப்பை பலப்படுத்தியதால் தான் இன்றைய ஆட்சியாளர்கள் அதனை வென்றெடுத்தனர். இப்போ இன்றைய ஆட்சியாளர்கள் தாங்கள் தான் வென்றெடுத்ததாக ஆரவாரம் செய்வது நகைப்பிற்கு இடமாக இருக்கிறது.

ஆணையிறவு, கிளிநொச்சி, வவுனியா, முதலிய இடங்களில் 17 இராணுவ முகாம்களை நாம் வைத்திருந்தோம். அதனை அகற்றியவர்கள் யார் என்பது ஆட்சியாளருக்குத் தெரியும்.

கருணா, பிள்ளையான் போன்றோர் ஜனநாயக வழிக்கு வந்துள்ளதால் தான் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஐ. தே.க. இவர்களை எடுத்திருந்தால் தீய சக்திகள் பெரும் பிரளயம் ஒன்றையே எற்படுத்தி இருப்பார்கள். அந்த தீய சக்திகள் தான் இந்நாட்டை அழித்து குட்டிச் சுவராக்கியது.

ரணில் விக்கிரமசிங்கவே புலிகளை ஜனநாயக நீரோட்டத்தில் கலக்க வழி செய்தார்.

யுத்தத்தினால் கண்ட பலன் தான் என்ன? இரு பகுதியிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்களையும் அப்பாவி சிவிலியன்களையும் காவு கொண்டதே யுத்தத்தினால் ஏற்பட்ட பயனாகும். இன்று நாடு அபிவிருத்தி அடைவதற்குப் பதிலாக மக்களின் துன்ப துயரங்கள் வறுமைகள் தான் தாண்டவமாடி வருகிறது. அடுத்த தேர்தலின் போது நாம் வெற்றி பெற்று நிச்சயம் மக்களுக்கு நின்மதியான வாழ்வைப் பெற்றுக் கொடுப்போம். (ஓ–6)

# பெற்றோலிய வளத்துறை அமைச்சராக பசில் எம்.பி. நியமிக்கப்படும் சாத்தியம்

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ஷ பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வளத்துறை அமைச்சராக நியமிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

உயர் நீதிமன்றம் அண்மையில் வழங்கிய ஆலோசனைக்கு அமைவாகவே பெற்றோலியம் மற்றும் பெற்றோலியத்துறை அமைச்சுப் பதவியில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அந்த அமைச்சுப் பதவியை பசில் ராஜபக்ஷவிற்கு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயர் நீதி மன்றத் தீர்ப்பு தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் அமைச்சர் பௌசி பாராளுமன்றத்தில் அண்மையில் விடுத்த விஷேட அறிக்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிப்பதாக அமைந்துள்ளதாகவும் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் புனித ஹஜ் கடமையை நிறை வேற்றுவதற்காக சென்றுள்ள பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ.எச். எம். பௌசி இவ்வாரம் நாடு திரும்பவிருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ–6)

# சமஷ்டியை ஏற்படுத்துவதன் மூலம் சமாதானத்தை மலரச் செய்ய முடியும்

## ஐ.தே.க. எம்.பி. கே. என். சொக்ஷி

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு தொடர்பில் மிக வேகமாக கலந்துரையாடி பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். சமஷ்டி தீர்வானது தனி ஈழம் அல்ல. அது நாட்டை பிரிக்காது என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் எம்.பி. கே.என். சொக்ஷி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

டொனமூர் யாப்பில் வலியுறுத்தப்பட்ட சமஷ்டி கோரிக்கையை கண்டிய தலைவர்களும் வரவேற்றனர். எனினும் அந்த சமஷ்டி முறை காலப் போக்கில் மறக்கப்பட்டு விட்டது ஆனாலும் தமிழ் மக்கள் அதனை மறக்கவில்லை என்றும் அவர் சொன்னார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2[illegible] அமைச்சுக்கள் மீதான வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே சொக்ஷி எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

தேசிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துக் கொண் டிருக்கின்ற இன்றைய நிலையில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட்டு தீர்வு காண்பதற்கு முயல வேண்டும்.

13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தில் அதிகாரப் பகிர்வு குறித்து கூறப்பட்டிருக்கின்றது. இதனை சரிவர நிறைவேற்றி சமஷ்டி முறையை ஏற்படுத்தும் [illegible]பாது பிரச்சினைக்கு தீர்வைக் கண்டு விடலாம்.

78ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் இந்நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. எனவே எமது தேசிய சிந்தனை பிறக்க வேண்டும். சமஷ்டி என்பது தனி ஈழம் என்று அர்த்தப்படாது நாடு பிளவு [illegible]வும் போவதில்லை. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்களை பகிர்வதாகும்.

பிரிவினைவாதம் என்பது அர்த்தமற்றது. அதனை நாம் அங்கீகரிக்க மாட்டோம். ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் சமஷ்டிக்கு உதாரணமாக இருக் கின்றன. இந்த வரிசையில் பல்லின சமூகத்தைக் கொண்ட இந்தியாவையும் இணைத்துக் கொள்ள முடியும்.

இனப் பிரச்சினை தொடர் பில் இலங்கையில் சமஷ்டி என்ற அடிப் படையை கொண்டிருக்க வில்லை. அதனை ஏற்படுத்துவதன் மூலம் சமாதா னத்தை மலரச் செய்ய முடியும்.

டொனமூர் அரசியல் யாப்பிலே சமஷ்டி குறித்து வலியுறுத்தப்பட்டது.

அதேபோல கண்டிய தலைவர்களும் இதனை வலியுறுத்தினர். எமது முன்னைய சிங்களத் தலைமைகள் இதனை ஏற்றுக்கொள்ளாததன் காரணத்தாலேயே இலங்கை இன்று பிரச்சினைக்குள் சிக்கித் தவிக்கின்றது. எனவே அரசியலமைப்பை மாற்றியமைப்பதாலும் உள்ளூர் சுயாட்சிகளை வழங்குவதன் மூலம் நாட்டுக்கு எந்த பாதகமும் ஏற்படப் போவதில்லை என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் முரண்பாடுகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். (ஓ–6)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி சுய நலமின்மை வெற்றியைத் தரும்



சுய நல நோக்கத்துடன் வெளியே செல்கின்ற ஆற்றல்கள் யாவும் சிதறி வீணாகின்றன. அந்த ஆற்றல் உங்களிடம் திரும்பி வருவதற்கான வழியில்லை. ஆனால் அவற்றின் ஆற்றல் கட்டுப்படுத்தப் படுமானால், அது ஆற்றல் வளர வழி வகுக்கும். இந்தச் சுய கட்டுப்பாடு மகத்தான சங்கல்பத்தை உருவாக்குவதற்கு ஏதுவாகும்; யேசுவையும் புத்தரையும் உருவாக்குகின்ற குண நலனைத் தரும். முட்டாள்கள்; இந்த ரகசியத்தை அறிவதில்லை. ஆனால் மனிதகுலத்தை ஆள மட்டும் அவர்கள் விரும்புகிறார்கள். வேலைகளைச் செய்து விட்டுக் காத்திருப்பானேயானால் முட்டாள் கூட உலகம் முழுவதையும் ஒரு நாள் ஆளலாம். ஆள வேண்டும் என்னும் முட்டாள் தனமான எண்ணத்தை விட்டு விட்டுச் சில ஆண்டுகள் காத்திருக்கட்டும்; அந்த எண்ணம் அவனிடமிருந்து முற்றிலுமாக விலகி விடுமானால், அவன் ஒரு மகத்தான ஆற்றலாக மாறிவிடுவான். சில மிருகங்களால் சில அடி தூரத்திற்கு அப்பால் எதையும் பார்க்க முடியாது அதுபோல் நம்மில் பெரும் பாலானோருக்கு சில ஆண்டுகளுக்குப் பிறகு என்ன நடக்கும் என்பதைப் பார்க்க முடிவதில்லை. ஒரு சிறிய வட்டம், அதுவே நமது உலகம். அதைக் கடந்து பார்க்கின்ற பொறுமை இல்லாமல் ஒழுக்க மற்றவர்களாகவும் தீயவர்களாகவும் மாறிவிடுகிறோம். இதுதான் நமது பலவீனம் வலிமையற்ற நிலை.

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா'

05

### வாழைத் தோட்டங்களின் அழிவு...

வாழை எதனையும் மிச்சம் வைக்கக் கூடாது என்ற கொள்கையில் 'நிஷா' புயல் வாழைத் தோட்டங்களை நிர்மூலமாக்கியது.

காற்றின் வேகத்திற்கு குலை போட்ட வாழைகளே முதலில் பலியாகின.



# கடல் அலை வேகத்தில் அள்ளுண்ட- பண்ணை வீதி

தம்மை ஈன்ற தாய்மார் குலையோடு விழுவதைக் கண்ட சோகத்தில் குட்டிவாழைகளும் தலையில் அடித்துக்கொண்டு சரிந்துவிழுந்தன.

குலை போட்டு குட்டிகளுடன் குடும்பமாக நின்ற வாழைகள் அலங்கோலப்பட்டு மண்ணில் வீழ்ந்து கிடக்கும் காட்சிகளைக் கண்ட வாழைத் தோட்ட எஜமானர்கள் தலையில் கை வைத்து ஒவென்று அழுதனர்.

இன்பத்திலும், இழப்பின் சோகத்திலும் நிமிர்ந்து நின்று நிலைமையை அடையாளப்படுத்தும் வாழைகள்



உடைந்த பண்ணை வீதி

அடையாளம் மதாயாமல் வீழ்ந்து கிடந்த சோகம் நெஞ்சை இறுக்கக்கூடியது.

இழப்பிலும் தோட்ட உரிமையாளர்கள் கையில் கத்தியுடன் அறுவை சிகிச்சையில் அவசரமாக ஈடுபட்டனர்.

புயலில் அடிபட்டு வீழ்ந்து கிடந்த வாழைகளில் உயிர்ப்பிக்கக் கூடியவைகளுக்கு அதி தீவிர சிகிச்சையும், சிகிச்சை பலனளிக்காதென இனங்காணப்பட்ட வாழைகளுக்கு தர்மக் கொலையும் செய்துமுடிக்கப்பட்டது.

மீண்டும், தழையும் மிடுக்கு இருக்கும் வரை எம்மை எவராலும் அழிக்க முடியாதென்பதை நிரூபிக்க தப்பிய வாழைகள் தளிர்விடுவது தமிழர்களுக்கும் நம்பிக்கை தருவதாகும்.

### பண்ணைப் பாலம் அடியுண்ட பரிதாபம்

யாழ்ப்பாணத்தையும் தீவகத்தையும் இணைக்கும் பண்ணை தாம் போதிக்கு நீண்டவரலாறு உண்டு.

பண்ணைத் தாம்போதியை அமைப்பதற்கு முன்னதாக தீவக மக்களின் பயணம் படகு மூலமாகவே இடம் பெற்றது.

தீவக மக்களின் பயணத்திற்காக வீதி அமைககபபடவேண்டும் என்ற கருத்து வலுவடைந்த போது எங்கிருந்து வீதியை அமைப்பது என்ற பிரச்சினை தீவக மக்களிடம் எழுந்தது.

வேலணை, புங்குடுதீவு மக்கள் வேலணை -அராலித்துறையினூடாக தரை வழிப்பாதையை அமைக்க வேண்டுமென வாதிட்டனர். மறு புறத்தில் தீவகத்திற்கான தரைப் பாதையை பண்ணையினூடாக அமைக்குமாறு மண்டைதீவு மக்கள் கேட்டுக் கொண்டனர்.

வேலணை-அராலித்துறையினூடாக தரைவழிப் பாதை அமைக்கப் பட்டால் அராலி, கல்லுண்டாய்வெளி, பொம்மைவெளி, நாவாந்துறை என நீண்ட இடங்களைச் சுற்றி வந்தே யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டும். பண்ணையினூடாகப் பாதை அமைத்தால் குறுகிய நேரத்தில் யாழ்ப்பாணத்திற்கு வந்துவிடலாம் என்பது மண்டைதீவு மக்களின் நிலைப்பாடு.

எனினும்,வேலணை,புங்குடுதீவு என்ற பெரிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அராலித்துறையூடாக தரைப் பாதையை அமைக்குமாறு வலியுறுத்துவதால், நிலைமையைச் சமாளிக்க அதிகாரிகள் ஒரு முடிவை எடுத்தனர்.

அதாவது மண்கும்பான் வழிப் பிள்ளையார் கோவிலில் திருவுளம் போடுவதென்றும், அதில் எந்தப் பாதையை அமைக்குமாறு தீர்ப்புக் கிடைக்கின்றதோ அதன் பிரகாரம்



நிஷாவுக்குப் பின் தீவக மக்களின் பயணம்...

செய்வதெனவும் தீர்மானிக்கப் பட்டது.

அந்தத் தீர்மானத்திறகு இரு தரப்பு மக்களும் இணங்கிக்கொண்டனர். திருவுளத்தில் பண்ணையூடாக வீதி அமைக்குமாறு தீர்ப்புக் கிடைத்தது.

**என்.விஜயன்**

இறைவன் மீது கொண்ட அளவு கடந்த நம்பிக்கை மக்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினையை சுமுகமாக தீர்த்துவைக்க, வீதி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

### சங்கிலிப் பாலம்

பண்ணை தாம்போதி சங்கிலிப் பாலம் என்றே அழைக்கப்பட்டது. குருநகர்-நாவாந்துறை கடலை ஊடறுத்து பாதை அமைக்கப்பட்டதால் ஒரு பகுதிக் கடலில் பயணிக்கும் பெரிய வத்தைகள் கடலின் மறுபக்கம் செல்வதற்கு வசதியாக பாலத்தை மேலே தூக்கக் கூடியவாறு நெம்பு முறையில் சங்கிலிப் பாலம் அமைக்கப்பட்டது.

பெரிய வத்தைகள் பயணிக்கும் போது சங்கிலிப்பாலம் மேலே தூக்கப் படும். அதனூடாக வத்தைகள் பயணிப்பதைப் பார்ப்பதில் பலருக்கு அலாதிப்பிரியம். எனினும், வத்தைகளின் பயன்பாடு அருகிப் போக சங்கிலிப் பாலமும் 1987களில் நிரந்தரப் பாலமாக அமைக்கப்பட்டது.

### 1991 களில் சேதம்

பண்ணைவீதி பல தடவைகள் சேதமடைந்துள்ளன. 1990 ஆம் ஆண்டு யாழ்.கோட்டையில் தங்கியிருந்த படையினரை மீட்கும் நோக்கில் ஊர்காவற்றுறை ஊடாக இலங்கை இராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கையின் போது விமானத் தாக்குதல் மற்றும் குண்டுத் தாக்குதலினால் பண்ணை வீதி சேதமடைந்தது.

எனினும், 1990 செப்ரெம்பர் 30ஆம் திகதிக்குப் பின்னர் கோட்டையிலிருந்த இராணுவத்தை மீட்ட கையோடு மண்டைதீவு, அல்லைப்பிட்டியில் தங்கி நின்ற இராணுவம், திரும்பிச் சென்று ஊர்காவற்றுறையில் தங்கிக் கொண்டது.

அதன் பின்னர் பண்ணை வீதி திருத்தியமைக்கப்பட்டு பயணம் இடம் பெற்றாலும்,மீண்டும் 1991 ஒக்டோபரில் தீவகம் முழுவதையும் படையினர் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முற்பட்டபோது பண்ணை வீதி துண்டறுக்கப்பட்டது

1991 ஒக்டோபரில் தீவக மக்கள் தமது தாய் மண்ணை விட்டு வெளியேறிய போது,பண்ணை வீதி உடைந்தே கிடந்தது. இதனால் தீவக மக்கள் அனைவரும் வள்ளங்களில் ஏறி பண்ணைப் பாலத்தைக் கடந்தே யாழ்ப்பாண எல்லையில் காலடி வைத்தனர். அதன் பின்னர் உடைந்துபோன பண்ணை வீதியை படையினர் திருத்தியமைத்தனர்.

மீண்டும் 25.11.2008 இல் ஏற்பட்ட கடும்மழை, பெரும் புயலில் பண்ணை வீதியின் ஒரு பகுதி கடலுடன்அள்ளுண்டு போனது.

*(வளரும்)*

# இந்தியா வந்தது இங்கிலாந்து அணி; நாளை மறுதினம் முதலாவது டெஸ்ட்



இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் விளையாட இங்கிலாந்து கிரிக்கெட் சபை அனுமதி அளித்ததை அடுத்து இங்கிலாந்து அணி வீரர்கள் நேற்றிரவு சென்னையை வந்தடைந்தனர்.

எனினும் இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டி மொஹாலியில் நடத்துவது குறித்து சந்தேகம் நிலவி வருகிறது.

இருப்பினும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை அதிகாரிகள் சென்னையில் மேற்கொண்டதைப்போன்று மொஹாலியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிடவுள்ளனர். இதனை தொடர்ந்து மொஹாலி டெஸ்ட் நடை பெறுவது குறித்து இறுதி முடிபு எடுக்கப்படவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டி இம்மாதம் 19ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை மொஹாலியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்து அணியினர் நேற்று இரண்டு பிரிவுகளாக சென்னையை வந்தடைந்தனர்.

ஒரு குழு அபுதாபியிலிருந்தும் மற்றொரு குழு டுபாயிலிருந்தும் சென்னை வந்தது. இதனிடையே இந்திய அணி வீரர்களும் முதல் டெஸ்ட் போட்டிக்காக நேற்று சென்னையை வந்தடைந்தனர்.



## இங்கிலாந்து அணியில் புதுமுக வீரர்

இந்தியா வருவது இன்னும் அதிகாரப்பூர்வமாக இங்கிலாந்து அறிவிக்காத நிலையில் அந்த அணியில் காயமடைந்திருந்த சைட் பொத்தமிற்கு பதிலாக புதுமுக வேகப்பந்து வீச்சாளர் அம்ஜத்கான் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

28வயதான அம்ஜத்கானின் பூர்வீகம் பாகிஸ்தான் ஆகும். இதே போல் இளம் சுழற்பந்து வீச்சாளர் ரஷித்தும் இங்கிலாந்து அணியினருடன் சென்னைக்கு வரவுள்ளார்.

(5)

## சென்னை டெஸ்டுக்கு பௌடன் நடுவர்

(சென்னை)

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி சென்னையில் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்த டெஸ்டுக்கு நியமிக்கப்பட்டிருந்த நடுவர்களில் ஒருவரான பாகிஸ்தானை சேர்ந்த ஆசாத் ரவுப் மும்பைத்தாக்குதல் சம்பவத்தால் போட்டிகள் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பதால் இன்னும் விசா கிடைக்கவில்லை. காலதாமதம் ஆவதால் முதல் டெஸ்டுக்கு என்னால்வர இயலாது என்று தெரிவித்திருந்தார். இதையடுத்து சென்னை டெஸ்டில் அவருக்கு பதிலாக நியூசிலாந்தை சேர்ந்த பில்லி பௌடன் நடுவராகப் பணியாற்றுவார் என்று ஐ.சி.சி அறிவித்துள்ளது.

# அன்னை திரேசா இல்லத்தில் குழந்தைகளை நெகிழவைத்த மரடோனா



கொல்கத்தாவில் உள்ள அன்னை திரேசா இல்லத்துக்கு சென்ற மரடோனா தனது நீண்ட நாள் கனவை நனவாக்கினார். இங்குள்ள குழந்தைகளுடன் இனிமையாக பழகி அனைவரையும் நெகிழவைத்தார்.

ஆர்ஜென்டினாவின் கால்பந்து ஜாம்பவான் மரடோனா இரண்டு நாள் பயணமாக கொல்கத்தா வந்துள்ளார். முதல் நாளில் இந்திய கால்பந்து பாடசாலையில் மாலையில் காட்சிப் போட்டியை ஆரம்பித்து வைத்தார். இரண்டாவது நாளான நேற்று முன்தினம் கொல்கத்தாவில் இருக்கும் மறைந்த அன்னை திரேசாவின் இல்லத்துக்கு சென்றார்.

1950இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இல்லத்துக்கு வருவதற்காகவே இந்தியா வர சம்மதித்ததாக மரடோனா ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தார். இந்த இல்லம் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், அனாதை குழந்தைகள், சமுதாயத்தால் கைவிடப் பட்டவர்கள் என எல்லோருக்கும் உதவி செய்து வருகிறது.

### காத்திருந்த பூக்கள்

திரேசா இல்லத்தில் மரடோனா நுழைந்தவுடன் மேகா என்ற 8 வயது குழந்தைக்கு முத்தமிட்டார். மேகா மூளை சம்பந்தப்பட்ட நோயால் பாதிக்கப்பட்டவர். மரடோனா வருகைக்காக பூக்களுடன் காத்திருந்த மேலும் 40 சிறுமிகளுக்கும் அவர் முத்தமிட்டார்.

அப்போது சிறுமிகள் சார்பில் இந்திய கிரிக்கெட் வீரர்கள் பயன்படுத்தும் நீல நிற தொப்பி மரடோனோவிற்கு பரிசாக அளிக்கப் பட்டது. பின்னர் மிஷினரி ஆப் சரிட்டியின் தற்போதைய மூத்த சிஸ்டர் நிர்மலாவை சந்தித்தார்.

### பிரார்த்தனை

பின்னர் இல்லத்தில் மலர்கொத்து வைத்து, மெழுகுவர்த்தி ஏற்றினார். கன்னியாஸ் திரிகளுடன் சேர்ந்து பிரார்த்தனையில் ஈடுபட்டார். பிரார்த்தனை முடிந்ததும் பார்வையாளர்கள் பதிவேட்டில் குறிப்பு எழுதினார். அதன் பின்னர் மரடோனாவுக்கு அன்னைதிரேசா பற்றி சுனில் தாக்சுவர் எழுதிய புத்தகம் வழங்கப்பட்டது.

### விடைபெற்றார்

இதற்கு பின் அங்கு சிறு குழந்தைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரிவு உபசார நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். திரேசா இல்லத்தை விட்டு வெளியே வந்ததும் வீதியின் இருபக்கங்களிலும் ரசிகர்கள் வரிசையாக நின்று மரடோனாவுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

### அலைமோதிய ரசிகர்கள்

திரேசா இல்லத்தை விட்டு வெளியே வந்தபோது அங்கு கூடியிருந்த ரசிகர்கள் பொலிஸ் தடுப்புகளை தகர்த்து மரடோனாவை பார்க்க ஆர்வமாக பாய்ந்தனர். தங்கள் கடவுளை தெளிவாக காண ஒருவரை ஒருவர் முண்டியடித்து கொண்டு கையால் இடித்துத் தள்ளினர். அவர்களுக்கு தனது மார்பில் குத்தியும், காற்றில் பறக்கும் முத்தங்களையும் மரடோனா பரிசாக அளித்தார்.

### சிறுவர்களுடன் கால்பந்து

கொல்கத்தா மோகன் பகான் கால்பந்து கழகம் அமைந்து இருக்கும் சால்ட் லேக் மைதானத்திற்கு நேற்று முன்தினம் மரடோனா சென்றார். அங்கு இளம் வீரர்களுக்கான கால்பந்து பயிற்சி முகாமை ஆரம்பித்து வைத்தார். வீரர்களுக்கு கால்பந்து நுணுக்கங்களை கற்றுக்கொடுத்தார். அப்போது பந்துகளை மைதானத்தில் அமர்ந்து இருந்த ரசிகர்களை நோக்கி அடித்து அசத்தினார்.

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் இல்லை

## பிரெட் லீ கூறுகிறார்

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து தற்போது ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என அவுஸ்திரேலிய வீரர் பிரெட் லீ தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் பிரெட் லீ சமீபத்தில் இந்திய தொடரில் மோசமாக செயல்பட்டார். ஆனால் அடுத்து நடந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 9 விக்கெட் வீழ்த்தி தனது சிறந்த பந்து வீச்சை நிரூபித்தார். அணித்தலைவர் பொன்டிங் ஓய்வு என்ற செய்தியை அடுத்து இப்போது பிரெட் லீ ஓய்வு பெறப்போகிறார் என செய்திகள் வெளியாகின.

இதற்கு மறுப்புத் தெரிவித்து பிரெட் லீ கூறியதாவது,

எனக்கு இப்போது உள்ள உடல் நிலையில், இன்னும் குறைந்தது 4 அல்லது 5 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடுவதில் உறுதியாக இருக்கிறேன். வேகப்பந்து வீச்சாளராக இருப்பதால் அடிக்கடி காயம் ஏற்படுகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் கிரிக்கெட் மிகவும் மாறி, புதிய வடிவில் உள்ளது. என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் காயத்தால் 18 மாதங்



களாக அணியில் 12 ஆவது வீரராகத்தான் இருந்துள்ளேன். எனது தரத்தை இப்போதும் உயர்த்திக் கொண்டுதான் உள்ளேன். இந்நிலையில் ஓய்வு பெறுவதைப் பற்றியே நான் சிந்திக்கவில்லை. இவ்வாறு பிரெட் லீ தெரிவித்தார்.

# அடுத்த மாதம் இந்தியாவில் 10 ஓவர்கள் அதிரடி திருவிழா

## உள்ளூர் அணிகள் மோதல்

(புதுடில்லி)

கிரிக்கெட் அரங்கில் புதிய அவதாரமாக10 ஓவர் போட்டி அடுத்த ஆண்டு அறிமுகமாகிறது. இருபது-20 அதிரடியை தொடர்ந்து இப்போட்டியும் ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருநாள் கிரிக்கெட் அலுத்துப்போகவே இருபது-20 போட்டி உருவானது. இதில் அசத்திய இந்திய அணி இருபது-20 உலக கோப்பையை வென்றது. தற்போது இன்னும் ஓவர்கள் குறைக்கப்பட்டு வெறும் 10 ஓவர் கொண்ட போட்டியை இந்தியாவில் தனியார் நிறுவனம் ஒன்று தேசிய அளவில் நடத்த உள்ளது. இரு அணிகளுக்கும் தலா 10 ஓவர்கள் என்பதால் போட்டிகள் வேகமாக இருக்கும். சுமார் 2 மணி நேரத்தில் ஆட்டம் முடிபடைந்துவிடும்.

### 25 இலட்சம் ரூபாய் பரிசு

அடுத்தாண்டு ஜனவரி 16ஆம் திகதி 10 ஓவர் கிரிக்கெட் திருவிழா ஆரம்பமாக வுள்ளது. இதில் முதல் தர போட்டிகளில் விளையாடாத 15 முதல் 24 வயது கொண்ட இளம் வீரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சூரத்,புனே, லூதியானா,தானே,லக்னோ,ஜலந்தர்,கான்பூர்,நாசிக் ஆகிய 8 அணிகள் கலந்து கொள்கின்றன.

ஒரு பிரிவுக்கு நான்கு அணிகள் வீதம்,இரு பிரிவாக பிரிக்கப்பட உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடங்களை பெறும் அணிகள் அரையிறுதியில் மோதும். இத்தொடருக்கு ஒட்டு மொத்தமாக 25 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பியன் பட்டத்தை தட்டிச் செல்லும் அணிக்கு 10 இலட்சம் ரூபாய் பரிசாக அளிக்கப்படும்.

### இஷாந்த் தூதர்

இத் தொடரின் விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய அணியின் வேகப்புயல் இஷாந்த் சர்மா கூறுகையில், உள்ளூர் அதிரடி போட்டிகள் [illegible]க்வும் பிடிக்கும். இங்கிருந்துதான் ஒவ்வொருவரும் கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பிக்கின்றனர். 10 ஓவர் போட்டி இளம் வீரர்களின் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும் என்றார்.

(5)

# அரியநேந்திரனின் இந்தியப் பயணம் தடுப்பு; நாடாளுமன்றில் சபாநாயகரிடம் முறையீடு

(கொழும்பு)

இந்தியா செல்ல விடாமல் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விமான நிலையத்தில் தன்னைத் தடுத்தமையானது சிறப்புரிமையை மீறும் செயலென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் நேற்று நாடாளுமன்றத் தில் முறையிட்டார்.

இந்தியாவுக்குச் செல்வதற்காக நேற்று முன்தினம் புறப்பட்ட போது கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்த அதிகாரி எனது கடவுச்சீட்டில் பிழையிருப்பதாகக் கூறி குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவரிடம் அழைத்துச் சென்றார்.

விசாரணை நடத்திய அந்தக் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி நாட்டைவிட்டு வெளியேற எனக்கு அனுமதியில்லையெனக் கூறியதாகவும் இது தனது சிறப்புரிமையை மீறும் செயல் எனவும் அரியநேந்திரன் சபாநாயகரிடம் முறையிட்டார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடுப்பதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அதிகாரம் இல்லை என உயர் நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டுள்ள போதும் சட்டத்தை மீறும் வகையில் குற்றப் புலனாய்வு பிரிவினர் செயற்பட்டிருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு உத்தரவிடுவதாக சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (ந-5)

# மத்திய,வடமேல் மாகாண சபைகள் நேற்று நள்ளிரவுடன் கலைப்பு

(கொழும்பு)

மத்திய மற்றும் வட மேல் மாகாண சபைகள் நேற்று நள்ளிரவுடன் கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேல் மாகாண சபையும் விரைவில் கலைக்கப்படும் எனவும் குறித்த இரண்டு மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் அடுத்த வருட பெப்ரவரிக்கு முன்னதாக நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடமேல் மாகாண சபையின் ஆயுட்காலம் அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துடனும், மத்திய,மேல், தென் மற்றும் ஊவா மாகாண சபைகளின் ஆயுட் காலம் ஓகஸ்ட் மாதத்துடனும் முடிபடையவுள்ளன.

இந்தத் தேர்தல்கள் தொடர்பாக அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் சந்திப்பொன்று நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதாரத் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, டலஸ் அழகப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, மத்திய, மேல் மாகாண, வடமேல்,தென் மற்றும் ஊவா மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது எந்த நேரத்தில் தேர்தல்கள் வந்தாலும் தாம் அதற்கு முகம் கொடுக்கத் தயார் என குறித்த மாகாண முதலமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். (ந-5)

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணைகிறார் கரு ஜயசூரிய

## பிரதித் தலைவர் பதவியை வழங்கினார் ரணில்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வந்த மூத்த அமைச்சர் கரு ஜயசூரிய ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்துள்ளார்.

கட்சியின் பிரதி தலைவர் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகங்களுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயக குழுவாக நாடாளுமன்றத்தில் செயற்பட்டு அதன் தலைவராகவும் விளங்கிய அமைச்சர் கரு ஜயசூரிய, இன்று அமைச்சரவை அந்தஸ்தை இராஜினாமாச் செய்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இன்று இணையும் போது 18 உறுப்பினர்களில் எத்தனை பேர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வார்கள் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

குறைந்தது 5அல்லது6 உறுப்பினர்கள் அமைச்சர் கரு ஜயசூரியவுடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையலாம் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடமும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமும் அமைச்சர் கரு ஜயசூரிய இன்று கையளிப்பார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகோத்தாவில் நேற்று நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் பிரதித் தலைவராக அமைச்சர் கருஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உப தலைவராக ருக்மன் சேனநாயக்கவும் தவிசாளராக காமினி ஜெயவிக்கிரம பெரேராவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்க விண்ணப்பித்திருந்த நிலையில் அமைச்சர் கரு ஜயசூரிய அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதால் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் விசனமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## பிரணாப் முகர்ஜி...

பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியைக் கைப்பற்றுவது ஒரு அரசியல் இலாபம் கருதியே என கூறப்படுகின்றதே, இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன என்று கேட்டபோது,

கிளிநொச்சி இலங்கையில் உள்ள ஒரு பிரதேசம். அங்குள்ள மக்களை பயங்கரவாதிகளிடம் இருந்து காப்பாற்றுவதே எமது நோக்கம். அதற்கான நடவடிக்கைகளையே நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

இலங்கை, இந்தியா அரசு பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிராக ஒரே வேளையில் குரல் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது என்றார். (ந-5)

## வரவு-செலவுத்...

ஆகிய கட்சிகள் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்தன. சிறிலங் கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் ஏற்பாட் டாளர் மங்கள சமரவீர மற்றும் நாடாளுமன் றத்தில் தனித்துச் செயற்படும் விஜயதாச ராஜ பக்ஷ ஆகியோரும் அமைச்சர்களான ஏ.எச். எம் பௌசி மற்றும் நவீன் திஸ்ஸநாயக்க ஆகியோரும் நேற்று நாடாளுமன்றத்திற்கு வரவில்லை (ந-5)

# வன்னியில் மோதல் தொடர்கிறது இரு தரப்பும் கடும் தாக்குதல்

(கொழும்பு)

கிளிநொச்சி நோக்கிய முன் நகர்வுகளை மேற்கொண்டுவரும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

கிளிநொச்சி மேற்கு மற்றும் அடம்பன் பகுதிகளில் இடம்பெற்ற இம்மோதல்களின் போது விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட மோட்டார் எறிகணைத் தாக்குதல்களில் படைத்தரப்புக்கு சேதமேற்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன்அப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள விடுதலைப் புலிகள் மீதும் படையினர் பதிலுக்கு மோட்டார் தாக்குதலை நடத்தியதாகவும் இதன்போது புலிகள் தரப்புக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு ஒலுமடுப் பிரதேசத்திலும் இரு தரப்பினருக்கும் இடையில் பரஸ்பர மோட்டார் எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதனை அடுத்து அப்பகுதியில் படையினர் நடத்திய சோதனை நடவடிக்கையின் போது விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரது சடலம் உட்பட நிலக் கண்ணி வெடிகள், 65 ஆர்.பி.ஜி ரக எறிகணை -01 மற்றும் தகவல் பரிமாற்றுக்கருவி -01 போன்ற ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

## இராணுவத் தளபதியின்...

அப்படிச் சொல்லியிருப்பது உண்மையானால் அது கண்டிக்கத்தக்கது. இங்குள்ள தமிழகத்தின் தலைவர்கள் தங்களுக்குள் உள்ள பிரச்சினைகளின் அடிப்படையில் ஒருவரைப் பற்றி மற்றொருவர் விமர்சித்துக் கொள்வது என்பது வேறு, ஆனால் இன்னொரு நாட்டவர் தமிழகத் தலைவர்களை இவ்வாறு விமர்சிப்பது எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

அப்படி விமர்சித்திருந்தால் அது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

*கேள்வி:* டாக்டர் ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில், இலங்கை இராணுவத் தளபதியின் கருத்துக் குறித்து தாங்கள் பிரதமரின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரே?

*பதில்:* டாக்டர் ராமதாஸ் போன்றவர்கள் அது பற்றிக் கூறியுள்ளதே இந்நேரம் பிரதமரின் கவனத்திற்குச் சென்றிருக்கும்.

*கேள்வி:* வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைக்குப் போகப் போவதாக சொல்லப்பட்டதே, நாள் உறுதியாகி விட்டதா?

*பதில்:* இன்னும் நாள் குறிப்பிடவில்லை. விரைவில் செல்வார்.

*கேள்வி:* இராணுவத் தளபதி, போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இந்திய அரசு வைக்காது என்று சொல்லியிருப்பதைப் பற்றி?

*பதில்:* இதைப் பற்றியெல்லாம் நானும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் டில்லியில் பிரதமரைச் சந்தித்தபோது விரிவாகப் பேசி, அதற்குப் பிறகு எடுக்கப்பட்ட முடிபுதான் வெளியுறவுத் துறை அமைச்சர் சென்று நம்முடைய கோரிக்கையை வலியுறுத்தவும் - போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்பது பற்றிய கோரிக்கையை வலியுறுத்தவும் -அதனடிப்படையில் அவர்களை நடந்து கொள்ளச் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம்.

அதைப் பிரதமரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்றார் கருணாநிதி. (ந-5)

## சரத் பொன்சேகாவின்...

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, அரச வார ஏடான சண் டே ஒப்சேவருக்கு வழங்கிய செவ்வியில் தமிழகத் தலைவர்கள் கோமாளிகள் என்றும் அவர்களின் கருத்துக்கு செவி சாய்த்து யுத்த நிறுத்தம் செய்யுமாறு இந்திய மத்திய அரசு இலங்கையிடம் கேட்காது என்றும் கூறியிருந்தார்.

இராணுவத் தளபதி கூறிய இக் கருத்தால் தமிழக அரசியலில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

அனைத்து அரசியல் கட்சிகளும் இராணுவத் தளபதியின் கருத்தை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் இந்த நிலைமைக்கு இந்திய மத்திய அரசே காரணம் என்றும் குற்றம் சுமத்தியுள்ளன.

தமிழகத் தலைவர்கள் கோமாளிகள் என்ற கூற்றுக்காக இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தமிழகத் தலைவர்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டுமென்ற கருத்தும் வலுவடைந்து வருகிறது.

இதனிடையே தமிழகத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடத்துவதில் தமிழக அரசியல் கட்சிகள் களத்தில் இறங்கியுள்ளன.

நேற்றைய தினம் தமிழகத்தில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் உருவப் பொம்மைகள் தீயிடப்பட்டன.

அடுத்துவரும் நாட்களில் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்படும் என்பதால் நிலைமையைச் சமாளிக்க பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கருத்தால் தமிழகத்தில் எழுந்துள்ள கொந்தளிப்பு -பதற்றம் மத்திய அரசுக்கு பெரும் திண்டாட்டத்தை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)

## நல்லடக்கம் பற்றிய அறிவித்தல்



05.12.2008 (வெள்ளிக்கிழமை) அன்று கொழும்பில் காலமான எமது குடும்பத் தலைவர்

**திரு.ஜோ.அரியரட்ணம்**

அவர்களது நல்லடக்க ஆராதனை இன்று (09.12.2008) காலை 9 மணிக்கு 16, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

16, சோமசுந்தரம் அவனியு,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:- 222 5031

(1943)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.